
குங்குமச்
சிமிழ்
15-12-2009
விலை ரூ.4
உனக்காகவே
நான் வாழ்கிறேன்
லட்சுமி பிரபா

முழு நாவல்

# உனக்காகவே நான் வாழ்கிறேன்

தோட்டத்திலிருந்து சுதந்திரமாய் புகுந்த காற்று, ஜன்னல் திரைகளை நர்த்தனமாட வைத்தது.

பச்சை மரங்களுக்குள் பதுங்கி இருந்த பறவைகள் குதூகலமாய் 'கல கலத்வனி' செய்து கொண்டிருந்தன.

படுக்கையில் புரண்டு படுத்த அபர்ணா... மெல்ல எழுந்து அமர்ந்து எதிர்ச்சுவரில் மாட்டப்பட்டிருந்த அலங்கார கடிகாரத்தை ஏறிட்டாள்.

மணி நான்கு!

இரவெல்லாம் தூங்காமல் கண் விழித்திருந்ததால்... கண்கள் இரண்டும் அக்னித் துண்டங்கள் பட்டாற்போல் ஜிவுஜிவென்று எரிந்தன.

தளர்வாய் எழுந்து நடந்து ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள் அபர்ணா.

வாசலருகே நின்ற பன்னீர்புஷ்ப மரத்தில்... பூக்கள் பூத்துக் குலுங்கி, தன்

## லட்சுமி பிரபா

சுகந்த நறுமணத்தை மெல்ல விநியோகம் செய்து கொண்டிருந்தன.

பனி, சாம்பிராணி போட்டது போல் பரவிக் கிடந்தது.

சில்லென்ற காற்று இதமாய் அவளை ஸ்பரிசித்தபோது... அவளுக்கு சட்டென்று கணவன் அரவிந்த ராமின் நினைவு தான் வந்தது.

"என்ன அபர் இது? உடம்பைப் போட்டு ஏன் இப்படி அலட்டிக்கிறே? விடியக் கார்த்தால எழுந்து வாசல் தெளிச்சு கோலம் போட்டு... குளிர், மழைன்னு கூடப் பார்க்காம ஸ்நானம் பண்ணி... பூஜையறையில விளக்கேத்திவிட்டு தியானம் பண்றே...

குளிர்லே தோட்டத்துப் பூக்களைப் பறிச்சு பூச்சரமா தொடுத்து ஸ்வாமிக்கு போடறே... இதெல்லாம் ரொம்ப நல்ல பழக்கம்தான்! இந்தக் காலத்துப் பொண்ணுங்க யாருமே இப்படி இருக்கவே மாட்டாங்க. நான் ஒத்துக்கிறேன்.

அத்தை உன்னை ரொம்ப நல்லா உருவாக்கி இருக்காங்கன்னு... உள்ளூர நான் பெருமைப்படத் தான் செய்றேன்.

நீ வெறும் 'ஹவுஸ் வொய்ஃபா' இருந்தாலும் பரவாயில்லை.

ஆபீஸுக்குப் போய் வேலை வேற பார்க்கிறே... இவ்ளோ சீக்கிரத்துலே எந்திரிச்சதிலே இருந்து கால்லே சக்கரத்தை மாட்டிக்காத குறையா பரபரன்னு வீட்டு வேலை, சமையல் எல்லாத்தையும் முடிச்சுடறே...

ஆபீசுக்குப் போனா... சாயந்தரம் ஆறுமணிக்குத்தான் வீட்டுக்கு வர முடியுது.

சரி... லீவு நாட்கள்லேயாவது இந்த மாதிரி எந்த பரபரப்பும் இல்லாம... நிம்மதியா அக்கடான்னு தூங்கி எட்டரை மணிக்கு எழுந்துக்கக் கூடாதா?

இன்னிக்கு சன்டேதானே? ரிலாக்ஸ்டா இரேன்... விடியக்கார்த்தால தூக்கம் இழுத்துட்டுப் போனா... அது அலாதி சுகம்தான் தெரியுமா?

சின்னச் சின்ன சந்தோஷங்களை ஏன் இழக்கணும் அபர்?" கட்டிலிலிருந்து இறங்க முற்பட்டவளின் கரத்தைப் பற்றிக் கொண்டு... கரிசனத்துடன் அடிக்கடி கடிந்து கொள்வான் அரவிந்தராம்.

"என்மேல உங்களுக்கு இருக்கிற அக்கறையையும் அன்பையும் பார்த்தா... ரொம்ப பூரிப்பா இருக்கு.

நீங்க சொல்றதிலே எப்பவும் நியாயம்தான் இருக்கும். சின்னச் சின்ன சந்தோஷங்களை ஏன் இழக்கணும்னு கேட்கறீங்க?

சரிதான்! சந்தோஷம்கிறது மனசைப் பொறுத்த சமாச்சாரம்... இல்லையா?

எனக்கு இப்படி இருக்கத்தான் பிடிச்சிருக்கு... சீக்கிரமா எழுந்து பழகிப்

போச்சு... அம்மா இப்படியே வளர்த்துட்டாங்க... ரத்தத்துலே ஊறிப் போன சமாச்சாரத்தை எப்படி மாத்திக்க முடியும் அரவிந்த்?"

அம்மா அடிக்கடி சொல்வாங்க... 'பெண் குடும்பத்துக்கு அச்சாணி மாதிரி... அவ எப்பவும் லட்சுமிகரமா, சுறுசுறுப்பா வளைய வரணும். அப்பத்தான் குடும்பத்துல சுபிட்சம் நிலவும்'னு கேட்டுக் கேட்டு வளர்ந்துட்டேன்.

ஒரு மேலை நாட்டுத் தத்துவஞானி 'சோம்பேறி என்பவன் இரண்டு முட்களும் இல்லாத கடிகாரம்; அது நின்றாலும் ஓடினாலும் பயனில்லை' அப்படின்னு சொல்லியிருக்காரு...

அதனால தினப்படி இந்த வேலைகளை செய்தாதான் எனக்கு நிம்மதியா நிறைவா இருக்கு அரவிந்த்" இதமாய் முறுவலிப்பாள் அபர்ணா.

"எனக்கு உன்கிட்ட பிடிச்ச விஷயமே... சதா முகத்துல புன்னகையை ஒட்ட வச்சுக்கிட்டு... எண்ணெயிட்ட சக்கரம் மாதிரி துறுதுறுன்னு வளைய வர்றே... பாரு...!

எனக்கும் உன்னோட பழக்கவழக்கங்கள் தொத்திக்கிடுச்சு... சதா 'கடுவன் பூனை' மாதிரி இருக்கிறவனை... நீ ஓட்டு மொத்தமா மாத்திட்டே...

கல்யாணத்துக்கு அப்புறம் நான் ரொம்பவே மாறிப் போயிட்டேன் அபர். என்னோட நிலைமை, தகுதி எல்லாமே அடியோட மாறிப் போயிடுச்சே? ரியலி அயாம் லக்கி அபர்"

"என்னைத் தூக்கி வச்சுப் பேசலைன்னா... உங்களுக்கு தூக்கமே வராதே? நீங்க மட்டும் என்ன சளைச்சவரா? ஆபீஸ்லே... இந்தச் சின்ன வயசிலேயே 'பெரிய பதவி' உங்களைத் தேடி வந்திருக்கே?

அதுக்கு உங்க திறமையும், விடாமுயற்சியும், உழைப்பும்தானே காரணம்?

வெற்றி பெறணும்கிற வெறியோட... சதா உத்வேகத்தோட பாடுபடறீங்க... அன்பா அனுசரணையா நடந்துக்கிற கணவர் நீங்க!

உண்மையிலேயே... நீங்க கிடைக்கிறதுக்கு நான்தாங்க குடுத்து வச்சிருக்கணும்..."

"எனக்கும் தூக்கம் போயே போச்சு! சரி... நீ குளிச்சுட்டு வா... நான் ஜாகிங் பண்ணிட்டு வரேன்... ஆமா... அத்தைக்கு மூட்டு வலி தேவலையா?"

"கொஞ்சம் பரவாயில்லைன்னு சொன்னாங்க... நீங்க வாங்கிட்டு வந்த மாத்திரையைப் போட்டுக்கிட்டதும்.... அசந்து அம்மா தூங்கிட்டாங்க..."

"தைலம், ஆயின்மெண்ட் எது தேவைன்னாலும் முன் கூட்டியே சொல்லி வாங்கி வச்சுக்கோ... நான் பிராஜெக்ட் விஷயமா வெளியூர்களுக்குப் போற நேரத்துல... நீங்க ரெண்டு பேரும்தான் தனியா இருப்பீங்க...

இது புறநகர்ப் பகுதி வேற... ஆத்திர அவசரத்துக்கு மெடிக்கல் ஷாப்பைத் தேடிக்கிட்டு... நீ அவஸ்தைப் படக்கூடாது...

அதுக்குத்தான் சொல்றேன்..."

வாத்சல்யம் சுமந்த வார்த்தைகள் தான் அவனிடமிருந்து ஜனிக்கும்.

அரவிந்த்ராம் அன்பே உருவானவன். அவனுக்கு அதிர்ந்து பேசவே தெரியாது.

அபர்ணாவை உள்ளங்கையில் வைத்துத் தாங்காத குறைதான்... அவளது தாய் பார்வதியிடம் மிகுந்த மரியாதையுடனும் கரிசனத்துடனும் நடந்து கொள்வான்.

அரவிந்த்துக்கு பூர்வீகம்... தஞ்சாவூருக்கு அருகே உள்ள சிறிய கிராமம்... சொந்த வீடும் நிலபுலன்களும் இருப்பதால்.. அவனைப் பெற்றவர்கள்... அந்த கிராமத்தை விட்டு நகர மறுத்து விட்டிருந்தனர்.

அவனுக்கு ஒரே ஒரு அண்ணன் மட்டும்தான். அண்ணன் கணேஷ்ராம்.. மாம்பலத்தில்தான் குடியிருக்கிறார்.

அரவிந்த் – அபர்ணா தம்பதியினர் இருவரும் வேலைக்குச் செல்பவர்கள் என்பதால்... அத்திப் பூத்தாற் போல் தான் மாம்பலத்திற்குச் சென்று அண்ணன் குடும்பத்தைப் பார்த்து வர முடிந்தது.

கணவனும் மனைவியும் சேர்ந்தாற்போல் லோன் போட்டு வண்டலூரில்... பச்சைப் பசேலென்ற சூழலில் ஏகாந்தமாக அழகான வீட்டைக் கட்டி சமீபத்தில் தான் குடியேறினர்.

திருமணமாகி மூன்றாண்டுகள் தான் ஆகின்றன. இதுவரை வாழ்க்கை தெளிந்த நீரோடையாய் ஓடிக்கொண்டு தான் இருந்தது.

யார் கண்பட்டதோ தெரியவில்லையே?

அரவிந்த் அவளிடமிருந்து விலகிச் செல்ல ஆரம்பித்துவிட்டானே?

அவனுக்கும் அவளுக்கும் இடையே விரிசல் விழுந்து விட்டதே?

அந்த விரிசல் அகண்டு கொண்டே போய், பெரிய அகழியாக மாறி விடுமோ என்று பயமாக இருக்கிறதே?

மனதில் உள்ளதை யாரிடமாவது கொட்டித் தீர்க்கலாம் என்று பரிதவிப்பாக இருக்கிறது. ஆனால் அதற்கு வழியில்லையே?

அம்மா பார்வதி காலமெல்லாம் கஷ்டப்பட்டவள். இப்பொழுதுதான் நிம்மதியாக இருக்கிறாள்.

மகளின் வாழ்க்கை பறிபோகப் போகிறது என்று தெரிந்தால்... அதிர்ச்சியில் உயிரையே விட்டு விடுவாள்.

கவலை மனதை ஆட்டிப் படைத்ததில்... அவளிடமிருந்து தூக்கம் விடைபெற்றுக் கொண்டது.

'நடப்பது நடக்கட்டும்... பக வானின் மீதுபாரத்தைப்போட்டு நடக்க வேண்டியதுதான்'

அடர்ந்த ஜன்னலருகே நின்றபடி... சிறு வெளிச்சப் புள்ளியே இல்லாத இருளை வெறித்துக் கொண்டிருந்த அபர்ணா... நீண்ட பெருமூச்சு விட்டபடி... பாத்ரூமை நோக்கிச் சென்றாள்.

ஆனால் விதி சிரித்தது... அவளை ஒரேயடியாக கவலைக் கடலில் மூழ்கடிப்பதற்காக... தக்க தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தது.

2

பூஜையறையிலிருந்து அபர்ணா வெளிப்பட்டதும்... அம்மா பார்வதி ஆவி பறக்கும் காபியை எடுத்துக் கொண்டு அடுக்களையிலிருந்து மெல்ல வந்தாள்.

"சூடு ஆறும் முன்னே காபியைக் குடிச்சுடு அபர்! என்னது இது? கண்ணெல்லாம் சிவந்திருக்கு...

முகமெல்லாம் வீங்கினாப் பல இருக்கு. ஜுரம் அடிக்குதா என்ன?" என்று கேட்டவாறே மகளின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். சில்லென்று இருந்தது.

"நைட்டுலே சரியா தூக்கம் வரலைம்மா... அதான்"

"மாப்பிள்ளை அடிக்கடி பிராஜெக்ட் விஷயமா வெளியூர்களுக்குப் பறந்துட்டுத் தானே இருக்காரு? இது சகஜம் தானே?

இந்த வாட்டி அவர் மும்பைக்குப் போயி நாலு நாள் தானே ஆகுது, அவர் கிளம்பிப் போனதிலிருந்தே... உன் முகமே சரியில்லை அபர்..."

"அவர் பத்திரமா வந்து சேரணுமேங்கிற கவலைதான் அம்மா. அவர் திரும்பி வர்ற வரைக்கும் ஒரு

## பெண்

கவிதை

பயந்த சுபாவம்
மருண்ட பார்வை
தயங்கிய பேச்சு
துன்பம் சகித்தல்
அழுது புரளல்...
அனைத்தும் இறந்தகாலமாகியது...
செயலாக்கம் புரிந்திட
அறிவையும் துணிவையும்
ஆற்றல் மிகு சிறகாக்கி
தொலைநோக்குப் பார்வையோடு
உன்னத நிலையை அடைவது
என்பது நிகழ்காலமாகியது...
பெண்ணே!
நீ பேறு பெற்றாய்...
தேசத்தின்
ஆற்றல் மிகு அச்சாணியானாய்...!

- கே.சுபிதா, தூத்துக்குடி.

டென்ஷன் இருக்கும். அதான் சரியா தூக்கம்கூட வரமாட்டேங்குது.”

“என்ன அபர் இப்படிப் பேசறே? மாப்பிள்ளை வெளியூருக்குப்போற சமயங்கள்லே நீ தைரியமா வளைய வருவியே? நீ இப்படி பேசறது எனக்கு ரொம்ப ஆச்சரியமா இருக்கு...

ஒருநாள்கூட நீ இந்த மாதிரி கவலைப்பட்டு பேசவே மாட்டியே? ஊகூம்.. உன்னோட கவலைக்கு இது காரணமா இருக்கவே இருக்காது. வேற ஏதோ இருக்கு... நீ என்கிட்ட மறைக்கிறே... நான் உன்னைப் பெத்தவள் கண்ணா...

ஆபீசுலே ஏதாச்சும் பிரச்சினையா அபர்? எதுவா இருந்தாலும் மனசுலே இருக்கிறதை கொட்டித் தீர்த்துடு... அப்பத்தானே பாரம் குறையும்?”



**ந**யன்தாரா முதல் முதலாக கன்னட மொழிப் படம் ஒன்றில் நடிக்கிறார். சம்பளம் எவ்வளவு தெரியுமா? ரூ 60 லட்சம் கேட்டுள்ளாராம்.

**- க.ரவீந்திரன்**

ஆதுரமாய் மகளின் கூந்தலை வருடியபடி கேட்டாள் பார்வதி.

பார்வதி தன் மகளின் மீது உயிரையே வைத்திருந்தாள். மகளின் முகம் இலேசாகச் சுணங்கினாலே... அவள் தாங்கிக் கொள்ளமாட்டாள்.

அன்புக்குகந்த கணவர் நீலகண்டன் திடீரென்று விஷக் காய்ச்சலில் இறந்தபோது... அபர்ணாவுக்கு

நான்கு வயதுதான் இருக்கும்.

குழந்தை அபர்ணா மட்டும் அவளுக்கு பிறக்காமல் இருந்திருந்தால்... பார்வதி நிச்சயமாய் தற்கொலை செய்து கொண்டிருப்பாள்.

அச்சு அசலாக நீலகண்டனையே உரித்துக் கொண்டு வந்திருந்த மகள் அபர்ணா தான்... அவளுக்கு வாழ்ந்தே ஆக வேண்டும் என்ற பிடிப்பை ஏற்படுத்தினாள்.

நீலகண்டன் திடுதிப்பென்று காலமாகிவிட்டாலும்... மனைவி மகளை நட்டாற்றில் விட்டு விடவில்லை.

இன்ஷுரன்ஸ், வொர்க் காம்பன்சேஷன், சொந்தமாய் வீடு என்று இருக்கவே... பார்வதிக்கு வாழ்க்கையைக் கடக்கத் தோதாய் இருந்தது.

வீட்டை விற்று வந்த பணத்தை பேங்கில் போட்டு வைத்துக் கொண்டாள். தனது பிறந்த வீட்டின் அருகிலேயே சிறு வீட்டை வாடகைக்குப் பிடித்துக் கொண்டாள்.

பார்வதிக்கு நன்றாக தைக்கத் தெரியும். அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுக்கு தைத்துக் கொடுத்து சம்பாதித்தாள். கட்டும் செட்டுமாக குடும்பத்தை நடத்தி மகளை நன்றாகப் படிக்க வைத்தாள்.

தையல் மிஷினருகே அமர்ந்து தைத்துத் தைத்து ஓடாய் தேய்ந்து தான் போனாள்.

அபர்ணா தன் நினைவு தெரிந்த நாளிலிலிருந்தே... தனது தாயார் மூக்குக் கண்ணாடி அணிந்து கொண்டு சிரத்தையாய் துணிகளை வெட்டித் தைப்பதைக் கண்கொட்டாமல் பார்ப்பாள்.

மகளின் எதிர்கால வாழ்க்கைக்காக மெழுகுவர்த்தியாய் தன்னை உருக்கிக் கொண்டு வாழ்ந்த அந்த உத்தமியின் மீது... அபர்ணாவுக்கு கொள்ளைப் பிரியம், பாசம், நேசம் இருப்பது இயற்கைதானே?

தன் கஷ்டத்தை வெளியில் சொல்லி... அவளையும் வீணாக வேதனைப் படுத்த அபர்ணாவுக்கு விருப்பமில்லை.

'பாவம்! அம்மா... காலமெல்லாம் எனக்காகப் போராடி வாழ்ந்திருக்கிறாள். அந்தக் கஷ்டம் போதாதென்று... தாய்மாமன் சந்தானத்தால் எவ்வளவு பெரிய மன உளைச்சலுக்கு அம்மா ஆளானாளே?

உடன் பிறந்த மூத்த சகோதரி என்றுகூடப் பாராமல்... அவளை வேதனையில் துடி துடிக்க வைத்தாரே மாமா?

இரவெல்லாம் தூங்காமல் தினமும் அழுது புலம்பி, திகிலில் பி.பி. எகிறி மயங்கி மயங்கி விழுந்தாளே அம்மா?

பாவம்! இப்போது தான் அக்கடா என்று நிம்மதியாக இருக்கிறாள்.

அவளிடம் விஷயத்தைக் கூறினால்...? ஒருவேளை பி.பி. எகிறி ஏடாகூடமாக ஏதாவது ஆகிவிட்டால்...?

வேண்டாம்... அம்மாதான் எனக்கு நடமாடும் தெய்வம்... அவள் எப்போதும் நிம்மதியாக இருக்க வேண்டும்.

சதா கவலை படிந்த முகத்தில் சமீபகாலமாக... அரவிந்தை நான் கைப்பிடித்த பின்புதான்... சோகம் மறைந்து முகத்தில் மலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

அதையும் நான் ஏன் கெடுக்க வேண்டும்?

வேண்டாம்... விஷயத்தை எனக்குள்ளேயே போட்டுப் புதைத்து விட வேண்டியதுதான்...

ஆனாலும்... எத்தனை காலத்திற்கு இதை மறைக்கமுடியும்? இன்றில்லாவிட்டாலும் என்றாவது ஒருநாள் விஷயம் அம்பலமாகிவிடுமே?

விஷயம் வெட்ட வெளிச்சமாகி விடும்போது... அம்மாவின் செவிகளுக்கு எப்படியும் எட்டிவிடும்...

அப்போது அதை அம்மா தாங்குவாளா? பலத்த அதிர்ச்சிக்கு ஆளாகி அம்மாவின் உயிருக்கு ஏதாவது ஆபத்து வந்துவிட்டால்?

எப்படியும்ஒரு அபாயம்நெருங்கிவிட்டது.என்பதைநினைக்கும்போதே... மேனி பதறுகின்றது.

'நடப்பது நடக்கட்டும்... எல்லாம் பகவான் செயல்' என்று பாரத்தைப்போட்டு நடக்க வேண்டியதுதான்!

'நானாக விஷயத்தைப்போட்டு உடைக்கவே மாட்டேன்'

– உள்ளூர உறுதியாய் முடிவெடுத்தவளை... அம்மாவின் குரல் கலைத்தது.

"என்னம்மா அபர்? நான் கேட்டுக்கிட்டே இருக்கேன். தீவிரமா ஏதோ யோசிச்சுட்டிருக்கே... ஆபீஸ்லே ஏதாச்சும் பிரச்சினையா?"

"அ... அப்படியெல்லாம் ஒண்ணுமே இல்லம்மா... ரெண்டு மூணு நாளைக்கு முன்னால பாத்ரூம்லே இருந்து ஸ்நானம் பண்ணிட்டு வர்றப்போ தலையில சொத்துனு பல்லி விழுந்துடுச்சும்மா...

அருவருப்பு... பயம்... மறுபடி தலைக்கு ஊத்திட்டு வெளியே வந்துட்டேன். அப்புறமா காலை நேரப் பரபரப்புலே அதை மறந்தே போயிட்டேன். ஆனா தூங்கப் போறப்போ... இனம் புரியாத பயம் நெஞ்சை அடைக்குதும்மா...

அவரு வேற ஊர்லே இல்லையா? மனசுக்குள்ளே பயம், சங்கடம், குழப்பம்... அதான்! உன்கிட்ட உண்மையைச் சொன்னா, வீணா நீ வேற

கவலைப் படுவியேன்னு தான்... இதை மறைச்சுட்டேன்"

சாமர்த்தியமாக மூடி மறைத்தாள் அபர்ணா.

அம்மா, மகளின் விழிகளை ஆழமாக ஊடுருவிப் பார்த்தாள். அபர்ணா சட்டென்று பார்வையைத் தழைத்துக் கொண்டாள்.

"ஓ... உன் கவலைக்கு இதுதான் காரணமா? நான்கூட என்னவோ ஏதோன்னு பயந்துட்டேன். 'உச்சந்தலையில பல்லி விழுந்தா உடனே மரணம் சம்பவிக்கும்'னு சில பேர் சொல்றதுண்டு...

ஆனா அது



கஜுராஹோவில் (மத்தியப் பிரதேசம்– காலம் கி.மு. 11–12–) கண்டரிய மகாதேவர் கோயிலில், பெண்மணி ஒருவர் திலகமிட்டுக் கொள்வதைச் சித்திரிக்கும் சிறப்பு வாய்ந்த அழகிய சிற்பம்.
– க.ரவீந்திரன்

உண்மையில்லை... எனக்குக் கூட இதே மாதிரி அனுபவம் ஏற்பட்டிருக்கு... பல்லி தலையில விழுந்தா வீட்டுலே கலவரம்னு எங்கப்பா சொல்லி நான் கேட்டிருக்கேன்.

கலவரம்னு வார்த்தையைக் கேட்டதும் அதுக்கும் பயந்துடாதே அபர்! மனசுல சஞ்சலம் சங்கடம் குழப்பம் வரும். அவ்வளவு தான்!

சதா பகவானை மனசுல நினைச்சு பிரார்த்தனை செய்தா... எந்த தோஷம் வந்தாலும் விலகிடும். சரியா?

நீ படிச்சவ... புத்திசாலி... திறமைசாலி... அதுவும் இந்தக் காலத்துப் பொண்ணு... பத்தாம்பசலி மாதிரி கண்டதையும் நெனச்சு பயப்படலாமா அபர்?

மாப்பிள்ளை வர்ற வரைக்கும் நீ தனியா படுத்துக்க வேணாம். என் ரூமுக்கு வந்துடு... என்கூட இருந்தேன்னா... நிம்மதியா தூங்குவே இல்லையா?"

## கவிதைகள்

**குறிகள்**

புள்ளியில் தொடங்கி
புள்ளியில் முடியும்
வாழ்க்கையில் தான்
எத்தனை
ஆச்சரியக்குறிகளும்
வினாக் குறிகளும்.

**உண்மை**

எந்த பொய்யிலும்
ஒரு மெய்
ஒளிந்திருக்கும்;
அம்மாவாசையின்
நிலவு போல!

- செல்வராஜா, சேலம்.

"நீ சொன்ன மாதிரி உன் ரூமுக்கே வந்துடறேன்மா..." தலையாட்டி விட்டு காபியை ஒரே மூச்சில் குடித்துவிட்டு... டம்ளரைக் கழுவுவதற்காக அடுக்களைக்குள் அடைக்கலமானாள் அபர்ணா.

மகளுக்கு ஆறுதல் கூறி தைரியப்படுத்தினாலும்... பார்வதிக்கு உள்ளூர திகில் ஊறியது.

'பல்லி விழுந்தா கலவரம்னு சொல்வாங்களே? மகளின் குடும்ப வாழ்க்கையில் ஏதாச்சும் குழப்பம் வந்துடுமா?

அபர்ணா இதுவரை என்னிடம் எதையும் மறைத்ததில்லையே? அவள் எதையோ என்னிடமிருந்து மறைக்கின்றாள் என்று என் உள் உணர்வு சொல்கின்றதே?

என்னை நேருக்கு நேராக ஏறிட்டுப் பார்ப்பதை தவிர்க்கும் பொருட்டு பார்வையைத் தழைத்துக் கொண்டு, வேறுபுறம் முகத்தைத் திருப்பிக் கொள்கின்றாளே?

விஷயம் என்னவாக இருக்கும்? அவளது கலவரம் படிந்த முகத்தைப் பார்த்தால்... மிகப் பெரிய கவலை ஆட்டிப்படைப்பது மாதிரி அல்லவா இருக்கின்றது?

கடவுளே! என் மகள் தன் கணவரோட நிம்மதியா சந்தோஷமா நீடூழி வாழணும்... அவ வாழ்க்கையில எந்தவொரு சோதனையும் குறுக்கிடாம இருக்கணும்...'

கண்ணீர் மல்க வேண்டிக் கொண்டாள் பார்வதி.

## 3

**க**ராஜில் இருந்த ஸ்கூட்டியை நிதானமாகத் தெருவுக்குத் தள்ளிக் கொண்டு போனாள் அபர்ணா.

அவளது கணவனுக்கு அலுவலகம் காரைக் கொடுத்திருந்தது. கராஜில் நின்றிருந்த காரை ஒருமுறை திரும்பிப் பார்த்தாள்.

'எந்தக் குறையும் இல்லாத நிறைவான வாழ்க்கைதான்! அந்த வாழ்க்கை வெகு சீக்கிரத்தில் பறிபோய்விடும் போலிருக்கிறதே?

சமயம் கிடைக்கும் போதெல்லாம்... "இன்னிக்கு நைட் வீட்டுலே எதுவும் சமைக்க வேணாம்... அத்தைகிட்டே

சொல்லிடு அபர்!

நீயும் நானுமா கார்லே ஒரு ரவுண்ட் அடிச்சுட்டு ஹோட்டல்லே சாப்பிட்டுட்டு அத்தைக்கு பார்சல் வாங்கிட்டு வந்துடலாம். க்விக்கா ரெடியாகி கிளம்பு டார்லிங்" என்று அடிக்கடி அரவிந்த் கூறுவாரே...'

வார விடுமுறை நாட்களில் "பாவம் அத்தை... சதா நாலு சுவத்துக்குள்ளேயே அடைஞ்சு கிடக்காங்க... பக்கத்துல சிங்கப்பெருமாள் கோவிலுக்குப் போயிட்டு வரலாம்.

அப்படியே அங்க... மலைக் காட்டுலே இருக்கிற கோவிலுக்கும் கச்சாலீஸ்வரர் கோவிலுக்கும் போய் தரிசனம் பண்ணிட்டு வரலாம்.

சீக்கிரமா கிளம்பினா... அப்படியே 'செட்டி புண்ணியத்துல' இருக்கிற கல்விக் கடவுள் ஹயக்ரீவரையும் சேவிச்சுட்டு வந்துடலாம்" என்று அக்கறையாய் அழைத்துக் கொண்டு போவாரே?'

நான்கு மாதங்களுக்கு ஒருமுறை திருவண்ணாமலைக்கு அழைத்துச் செல்வாரே?

வருடத்திற்கு இருமுறை தவறாமல் திருப்பதிக்கு காரிலேயே அழைத்துப் போவாரே?

எந்தவொரு கணவனும் தன் மனைவியை சந்தோஷமாக வைத்துக் கொள்ளவேண்டும் என்றுதான் நினைப்பான்.

ஆனால் அரவிந்த்? 'வீட்டிலிருக்கும் மாமியார் வயதானவர். கோவில் குளத்திற்கு அழைத்துச் சென்றால்... அவருக்கு நிம்மதியாகவும் திருப்தியாகவும் இருக்கும்' என்று உணர்ந்து செயல்படுபவர் ஆயிற்றே!

அம்மாவின் நெற்றியில் விபூதிக் கீற்றுடன்... ஸ்வாமி தரிசனத்தை முடித்துவிட்ட திருப்தியில் நிம்மதியாக கண்களை மூடி... பின் சீட்டில் சாய்ந்து அமர்ந்திருப்பதை... நான் அடிக்கடி திரும்பிப் பார்த்து உள்ளூர பூரிப்படைந்தேனே?

அத்தனையையும் இழக்கப் போகிறேனா நான்?

ஒரு ஈ, எறும்புக்குக்கூட நான் தீங்கு இழைத்ததில்லையே?

என் மனதால்கூட யாருக்கும் கெடுதல் செய்ய நினைத்ததில்லையே? அம்மாவும் சரி.. நானும் சரி... ஒரு பாவமும் அறியாதவர்கள்! அம்மா, இளம்வயதிலேயே விதவையாகிவிட்டாள். மகள்... நான்! இளம் வயதிலிருந்து வாழாவெட்டியாக நிற்க வேண்டும் என்று என் தலையில் விதி எழுதி வைத்துவிட்டதோ?'

"என்ன அபர், மாப்பிள்ளையோட காரையே வெறிச்சுப் பார்த்துட்டு இருக்கே?... ஸ்கூட்டியில... தாம்பரத்துல இருக்கிற உன் ஆபீசுக்குப் போய் வர கஷ்டமா இருக்கா? மாப்பிள்ளை இருந்திருந்தா... கார்லே உன்னை

ஆபீஸ்லே இறக்கி விட்டுட்டுப் போவாரு...

அவரு இல்லைன்னா சிரமம்தான் இல்லையா?" அம்மா கேள்விக்கணைகளைத் தொடுத்ததும்... அபர்ணா என்ன பதிலைச் சொல்வது? என்று தெரியாமல் திணறித் தான் போனாள்.

"அ... அப்படியெல்லாம் ஒண்ணுமில்லைம்மா... காஞ்சிபுரத்துல ஒரு பெருமாள் கோவில்லே... மேற்கூரையில பல்லியோட உருவம் பதிக்கப்பட்டிருக்காம்... படிக்கட்டுகள்லே ஏறி உச்சியில இருக்கிற பல்லியைத் தொட்டு வணங்கினா... பல்லி தோஷம் சட்டுன்னு விலகிடுமாம்...

ஆபீஸ்லே கூட வேலை பார்க்கிறவங்க சொன்னாங்க... அவரு வந்ததும் நாம்ப ஒருநாளைக்கு காஞ்சிபுரத்துக்கு போயிட்டு வரணும்னு யோசிச்சுட்டிருந்தேன்"

சட்டென்று ஒரு பொய்யை அவிழ்த்து விட்டாள்.

"அதுக்கென்ன? தாராளமா போயிட்டு வரலாம். மாப்பிள்ளை தான் தங்கமானவராச்சே? விஷயத்தைச் சொன்னா... உடனே கார்லே கூட்டிட்டுப் போயிடுவாருல்ல?

காமாட்சி அம்மனையும் தரிசனம் பண்ணிட்டு வரலாம். அந்த அம்பாளோட அருள்லே உனக்கு சீக்கிரமா குழந்தை பாக்கியம் கிடைக்கட்டும். வர வர பேரன், பேத்தியை மடியில போட்டுக் கொஞ்சணுங்கிற ஏக்கம்... எனக்கு அதிகரிச்சுட்டே போகுது அபர்... அந்த ஆசை நிறைவேறிச்சுன்னா... நிம்மதியா நான் கண்ணை மூடலாம் பாரு"

பெருமூச்சு விட்டாள் பார்வதி.

"ஏம்மா இப்படி பேசறே? பேரன் பேத்தியை நல்லபடியா வளர்த்து ஆளாக்கி கல்யாணம் காட்சியைப் பார்க்க வேணாமா? அதை விட்டுட்டு... என்னை அனாதையாக்கிட்டுப் போறதிலேயே குறியா இருக்கியே?"

"சரி... சரி... இனிமே நான் அப்படி பேசலைம்மா... ஆனா ஒண்ணை மட்டும் நீ நல்லா புரிஞ்சுக்கணும் அபர்! நெருப்புன்னா வாய் வெந்துடாது இல்லையா?

நான் போயிட்டா நீ அனாதை ஆயிடுவாயா? உனக்கு கண் நிறைஞ்ச கணவரை பகவான் கொடுத்திருக்காரு...

என் காலத்துக்கு அப்புறமும்... உனக்கு கணவனுக்கு கணவனா நண்பனுக்கு நண்பனா... தாயா, தந்தையா... இன்னும் சொல்லப்போனா தாயுமானவரா இருந்து மாப்பிள்ளை உன்னைப் பார்த்துப்பாரு...

உனக்குன்னு குழந்தைங்க வந்துடும்... அப்புறமென்ன, நீ அனாதை கிடையாதுடா... அதை நல்லா புரிஞ்சுக்கோ.

2009 ஆம் ஆண்டு தென்னிந்திய அழகியாகவும் கடந்த ஆண்டு இந்திய அழகிப் போட்டியில் இரண்டாவது இடத்தையும் பெற்ற ராகினி திரிவேதி 'அறியான்' படத்தில் நடிக்கிறார். இது இவர் முதல் தமிழ்ப் படம்.

- க.ரவீந்திரன்



சரி... கண்டதையும் நெனச்சு விசனப்படாம... பார்த்து கவனமா வண்டியை ஓட்டு.. ஆபீசுக்குப் போனதுமே மறக்காம ஒரு போன் பண்ணிடு... லீவு போட்டுட்டு வீட்டுலே இருன்னு சொன்னாலும் கேட்க மாட்டேங்கிறே...

கவலைப்பட்டு, தூங்காம முகமே உப்பிப் போய் இருக்கு... ஆபீஸ்லே உன்னைப் பார்க்கிறவங்க இதைப் பத்திக் கேட்பாங்க பாரேன்"

"இல்லம்மா... புராஜெக்ட் பண்ணிட்டிருக்கேன். சீக்கிரமா முடிச்சு ஃபைலை எம்.டி.கிட்ட குடுத்தாகணும். லீவு போட்டா பெண்டிங் ஆயிடும்... அதான்... ஆபீசுக்குப்போனதுமே உனக்கு ஃபோன் பண்ணிடறேன்... பை!" கையசைத்து விட்டு ஸ்கூட்டியை உசுப்பி, சீரான வேகத்துடன் சென்ற மகளின் உருவம்... தூரத்தில் சிறு புள்ளியாய் மாறி மறையும் வரை... அந்த திக்கையே வெறித்துக் கொண்டிருந்தாள் பார்வதி.

## கவிதைகள்

**தூறல்**

வீட்டில் இருந்தபடியே
நிலவைத் தொடுகிறது...
அம்மாவின் முகம் தொடும்
குழந்தை!

- பொதக்குடி 'வெற்றிமுரசு'

**துளிகள்**

பனித்துளியை
விட
பிரசித்திப்
பெற்றது
மனிதனின்
நெற்றியின்
வியர்வைத் துளி!
மழைத்துளியை விட
பிரசித்திப்
பெற்றது
வறியவனின்
அகோரப் பசியின்
கண்ணீர்த்துளி...!

- தா.முருகேசன்,
திருத்துறைப்பூண்டி

அபர்ணாவுக்கு... இதயத்தில் ஏற்கனவே இருந்த ரணம் கிளறி விடப்பட்ட தினுசில்... இன்னமும் அதிகமாக வலிக்கத் தொடங்கியது.

'அம்மாவுக்குத்தான் தனது மருமகனின் மீது எவ்வளவு நம்பிக்கை? ஒரு நல்லவனை உத்தமனை மகள் கைப்பிடித்து இருக்கிறாள் என்ற திருப்தி... அவளது மனம் முழுவதிலும் வியாபித்து இருக்கிறதே?

"என் காலத்துக்கு அப்புறமும்... தாயுமானவரா இருந்து மாப்பிள்ளை உன்னைப் பார்த்துப்பாரு" என்று கூறினாளே?

எவ்வளவு ஆணித்தரமான நம்பிக்கை?

அந்த நம்பிக்கை எனக்குள்ளும் ஆணிவேராய் ஆழமாய் இறங்கித்தானே இருந்தது!

ஆனால் அரவிந்த்? அதை வேரோடு தகர்த்து எறிந்துவிடுவார் என்று கனவிலும் கருதவில்லையே,

என்னை எந்த நிமிடத்திலும் தூக்கி எறிந்து விடத்துணிந்து விட்டாரே? அதன் பின்பு...

அம்மாவின் காலத்துக்கு அப்புறம்... என் கதி என்னவாகும்? கை நிறைய சம்பாதிப்பதால்... சொந்தக் காலில் நின்று கொள்ளலாம் தான்...!

யாருமற்ற அனாதையாய் ஒரு அழகான இளம்பெண் வாழா வெட்டியாய் தனித்து வாழ முடியுமா?

'ஒரு பெண் விதவையாய் கூட வாழ்ந்து விடலாம். சமுதாயம் அவளை ஒருவித இரக்கத்தோடு பார்க்கும்.

ஆனால் வாழாவெட்டியாய் ஒரு பெண் வாழ்வது என்பது சாத்தியமே இல்லை... இந்த சமுதாயம் அவளை வேறொரு கண்ணோட்டத்துடன் பார்க்கும். வாழாவெட்டி என்று தெரிந்தாலே... வக்ரம் பிடித்த ஆண்கள் வாலாட்ட ஆரம்பித்து விடுவார்கள்.

வாழாவெட்டியாய் வாழ்வது

என்பது... ஒரு பெண்ணிற்கு மிகவும் கொடுமையான விஷயம்..' என்று அம்மா அடிக்கடி கூறுவாளே?

எனக்கும் அந்த கதிதான் ஏற்படும் போலிருக்கிறதே? என்னால் அப்படி வாழ முடியுமா? இதுநாள் வரை அன்புக் கணவரின் பாசமழையில் நனைந்தவள் நான்!

திடீரென்று... அப்படியொரு நிலைமை ஏற்பட்டால்... அதைத் தாங்கிக் கொள்ளும் சக்தி என்னிடம் இருக்கிறதா?

சக்தி இருக்கிறதோ... இல்லையோ? விதி தலையில் எழுதி வைத்துவிட்டால்... எதையும் தாங்கித்தானே ஆகவேண்டும்?

ஆனால்... சமுதாயத்தின் ஏளனப் பார்வையைத் தாங்கிக் கொண்டு ஏச்சுபேச்சுக்களைக் கேட்டுக் கொண்டு ஒரு வாழாவெட்டியாக என்னால் வாழவே முடியாது!

இது நிச்சயம்! அம்மா இருக்கும் வரை தான் நானும் இருப்பேன். போதும்... வாழ்ந்தது போதும்! இனி நான் யாருக்காக வாழ வேண்டும்?

அம்மாவின் காலத்தோடு என் காலமும் முடிந்து விடட்டும். அதற்கு மேல் ஒரு கணம் கூட இருக்கமாட்டேன். கணவரின் அன்பை பறிகொடுத்து... பெற்ற தாயாரையும் பறிகொடுத்து... நான் ஏன் வாழவேண்டும்?

எனக்கென்று இந்த உலகத்தில் என்ன பிடிப்பு இருக்கிறது? இதுதான் சரியான முடிவு!" இதே எண்ணம் மனதிற்குள் திரும்பத் திரும்ப சுழன்று எழும்பி... அவளது இதயத்தை பலமாய் மோதியது.

## 4

அபர்ணாவுக்கு அலுவலகத்தில் வேலையே ஓடவில்லை. மனம் எதிலும் ஒட்ட மறுத்து சண்டித்தனம் செய்தது.

ஒரு மணி நேரமாக கம்ப்யூட்டர் முன் அமர்ந்து ஃபைலைப் புரட்டியவளுக்கு எதுவும் புரிபடாமல்.. மனதில் சூனியமாகவே இருந்தது.

திடுக்கிட்டுப் போனாள் அபர்ணா.

எப்போதும் கடமையே கண்ணாக இருப்பவள். அலுவலகத்தில் இதுவரை சின்ஸியர் சிகாமணி என்று பெயரெடுத்தவள்.

'கவலை ஒரு பக்கம் இருக்கட்டும்... கடமையை நான் ஒழுங்காகச் செய்ய வேண்டுமே?'

மனதைத் தட்டி அடக்கினாள். விழிகளை ஒரு நிமிடம் மூடினாள்.

ஏற்கனவே தியானம் செய்து பழக்கப்பட்டவள் என்பதால்... அலை பாய்ந்த மனதை சுலபமாக ஒருநிலைக்குக் கொண்டு வர முடிந்தது.

மளமளவென்று மீதம் வைத்திருந்த புராஜெக்ட் ஓர்க்கை செய்து முடித்தாள்.

திருப்தியாக வேலையை முடித்துவிட்டு கம்ப்யூட்டரை ஷட்–அப் செய்துவிட்டு... விரல்களை நெட்டி முறித்தபோது... காலியான வயிறு உறுமலாய் இரைந்து 'எனக்கு...?' என்ற போது தான்... அவளது பார்வை அவசரமாய் கையிலிருந்த வாட்சின் மீது படிந்தது.

மணி இரண்டே முக்கால்! டிபன் பாக்ஸையும் வாட்டர் பாட்டிலையும் எடுத்து வைத்துக் கொண்டு சாப்பிட ஆரம்பித்தாள்.

கணவன் ஊரில் இல்லாவிட்டால்... அடுக்களைக்குள் சென்று வக்கணையாய் சமைப்பதற்கு... அவளுக்கு சோம்பேறித்தனம் வந்துவிடும்.

இன்று... மகளின் முகம் வாட்டமாய் இருந்ததால்... பார்வதியே மகளை ஒதுக்கிவிட்டு நளபாகத்தில் இறங்கிவிட்டிருந்தாள்.

அபர்ணாவுக்கு மணத்தக்காளி வத்தல் குழம்பு என்றால் மிகவும் உயிர்...! மணத்தக்காளி வத்தல் குழம்பும் பருப்பு உசிலியும் சுட்ட அப்பளமும்... அம்மாவின் கைமணத்தில் சுவையும் மணமுமாய் இருந்தது.

போன இடத்தில் வேலை வெகு சீக்கிரமாக முடிந்துவிட்டால் சொல்லாமல் கொள்ளாமல் திடுதிப்பென்று வந்த இறங்கி இன்ப அதிர்ச்சி கொடுப்பதில் அரவிந்தனுக்கு அலாதி சுகம்தான்!

"என்ன அபர்... வெறும் சாதம் தானா? ஒண்ணுமே சமைக்கலையா? நான் ஊர்லே இல்லேன்னா... சமைக்கிறதே இல்லையா? உங்களுக்கு எல்லாம் வயிறுன்னு ஒண்ணு இல்லையா என்ன?

காரசாரமா ருசியா ஏதாச்சும் இருந்தாத்தானே... நாலு வாயாவது உள்ளே இறங்கும்? நான் மாசக் கணக்குல வெளியூர்லே தங்கிட்டாலும் இதே மாதிரி வெறும் சாதத்துலேயே பொழுதை ஓட்டிடுவீங்களா? உடம்பு என்னத்துக்கு ஆகும்?

என்ன அத்தே? நீங்களாவது எடுத்துச் சொல்ல மாட்டீங்களா? நான் போன இடத்துலே வேளா வேளைக்கு ஹோட்டல்லே ஜம்முனு சாப்பிட்டு வந்திருக்கேன்.

இங்க என்னடான்னா... இப்படி சிக்கனம் பிடிச்சிருக்கீங்களே, எனக்கு மனசுக்கு சங்கடமா இருக்கு தெரியுமா?" என்று அரவிந்த் உரிமையாய் கடிந்து கொள்வான்.

அந்த மாதிரி தருணங்களில்... அபர்ணா புன்னகையை மட்டுமே பதிலாகத் தருவாள்.

“இல்ல மாப்பிள்ளை! சிக்கனம் பிடிக்கிறதுக்காக இப்படி பண்ணலை... பொதுவாவே ஆம்பிளைங்க வீட்டுலே இல்லேன்னா... பெண்களுக்கு வகையா வக்கணையா சமைச்சு சாப்பிடறதுக்கு மனசே வராது.

ஆமா... நமக்கு மட்டும்தானே? சாதம் வடிச்சு, மோர் ஊத்தி ஊறுகாய் தொட்டுச் சாப்பிட்டா போறாதா?ன்னு தான் தோணும். இது இயற்கைதான்... இதுக்குப் போய் நீங்க சங்கடப்படாதீங்க மாப்பிள்ளை”



**க**ஜுராஹோவில் (ம.பி.– கி.மு.11–12) பர்ஸ்வநாத கோயிலில் பெண் ஒருவர் தன் சிகையை அலங்காரம் செய்து கொள்ளும் காட்சியைச் சித்திரிக்கும் அழகிய சிற்பம்.

**- க.ரவீந்திரன்**

அம்மா பார்வதி, மகளுக்காக அடிக்கடி பரிந்து கொண்டு பேசுவாள்.

“என்னத்தே?... நீங்களும் அவளுக்கு சப்போர்ட் பண்ணிப் பேசினா எப்படி? வாரக் கணக்குல... மாசக் கணக்குல இதே ரீதியில சாப்பிட்டா... ஆரோக்கியமே கெட்டுப் போயிடும்னு உங்களுக்குத் தெரியாதா? பெரியவங்க நீங்க... அவளுக்கு புத்தி சொல்றதை விட்டுட்டு... நீங்களும் சேர்ந்து இந்த மாதிரி சாப்பிட்டா எப்படி?

நான் அடிக்கடி வெளியூர்களுக்கும் வெளிநாடுகளுக்கும் போறதால தானே... நீங்க இப்படி அரைகுறையா சாப்பிட்டு வயித்தைக் காயப் போட்டுட்டு இருக்கீங்க, இனிமே புராஜெக்ட் சம்பந்தமா வெளியூர்களுக்கு ஆபீஸ்லே இருந்து... என்னை அனுப்பி வைச்சா... நான் வேண்டாம்னு மறுத்துடப் போறேன்...

எத்தன வாட்டி நான் சொன்னாலும்... நீங்க காதுலேயே வாங்கிக்கப் போறதில்லை... அதனால இதுதான் சரியான வழி!...”

"என்னங்க நீங்க? சின்ன விஷயத்தைப் போய் ஏன் இப்படி பெரிசு படுத்தறீங்க? புராஜெக்ட் விஷயமா ஆபீஸ்லே இருந்து உங்களை அடிக்கடி வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கிறாங்களே, அது எவ்வளவு பெரிய விஷயம்? உங்க திறமைக்கு கிடைக்கிற அங்கீகாரம் இது... அதைப்போய் வேண்டாம்னு யாராச்சும் மறுப்பாங்களா?

சரி... எங்க மேல நீங்க வச்சிருக்கிற அக்கறையைப் பார்த்தா... ரொம்பவே பெருமையா இருக்கு... இனிமே உங்க வார்த்தையை நாங்க மீறலை... போதுமா?" என்று உறுதியாய் வாக்களித்த பின்பு தான் சமாதானம் அடைந்தான் அரவிந்த்.



அபர்ணாவுக்கு எப்போதும் ஒருசொல், ஒரு வாக்குதான். வாக்கு கொடுத்தால் மாறவே மாட்டாள் என்பதை அவன் அறிவான்.

அவனுக்கும் அதே குணம்தான். சொன்ன சொல் தவறவே மாட்டான்.

கண்ணியம், இரக்க சுபாவம், பக்தி, பணிவு, அடக்கம், நிதானம், ரசனை என்று இருவருக்கும் குணாதிசயங்களில்கூட ஏகத்திற்கும் பொருத்தம்தான்...

கருத்தொரு மித்த தம்பதிகளாய் வாழ்ந்து வந்தவர்களின் மீது யார் கண்பட்டதோ தெரியவில்லையே?

ஒரு சின்ன விஷயத்துக்குக்கூட அவ்வளவு அக்கறை காட்டியவன் தான்... இப்போது அடியோடு மாறிப் போனதற்கு என்ன காரணம்,

"அபர்ணா! நீ கிடைக்க நான் ரொம்பவே கொடுத்து வச்சிருக்கணும். இந்த ஜென்மத்துல மட்டு மல்ல.. இன்னும் எத்தனை ஜென்மங்கள் நான் எடுத் தாலும்... நீதான் எனக்கு மனைவியா வாய்க்கணும்.

என் மனசு பூராவும் நீதான் விஸ்வரூபமெடுத்து வியாபிச் சிருக்கே... ஐ லவ் யூ ஸோ மச் அபர்ணா" அவளது

**ஹா**லிவுட் நடிகை மில்லி சிரஸ் கோடி கோடியாக சம்பாதிப்பவர். ஆனால் கஞ்சத்தனம் அதிகம் உள்ளவராம். ஹோட்டல்களுக்குப் போனால் டிப்ஸ் தரமாட்டாராம். இதனால் ஹோட்டல் தொழிலாளர்களின் நடுவே மிகுந்த அதிருப்திக்கு ஆளாகியுள்ளாராம் இவர். அடப்பாவமே!

- க.ரவீந்திரன்

பூங்கரத்தைப் பற்றி தனது கன்னத்தில் பொருத்திக் கொண்டு அடிக்கடி கூறுவாரே?

அதையெல்லாம் எப்படி மறந்தார்? சொன்ன சொல் தவறாத மனிதர் இப்படி மாறிவிட்டாரே?

அன்பை மழையாக வர்ஷித்து... என்னை ஆனந்த வெள்ளத் தில் திக்கு முக்காட வைத்துவிட்டு... திடுதிப்பென்று ஒட்டு மொத்தமாக ஒரேயடியாக என்னை உதறிவிட்டு விலகிச் செல்லத் துணிந்துவிட்டாரே?

இதற்கு எப்படி மனம் வந்தது? இது மனிதநேயம்தானா?

"மனிதநேயம் மிக்கவரை கணவராக அடைய நான்தான் ரொம்பவே கொடுத்துவச்சிருக்கணும்" என்று அடிக்கடி பெருமிதத்தோடு நான் கூறுவேனே?

அவரது மனிதநேயம் மங்கி மறைந்துவிட்டதா? அரவிந்த் அடியோடு மாறிவிட்டார்... அவரிடமிருந்த மனிதநேயம் தொலைந்து போய்விட்டது.

அவர் சொன்ன வார்த்தை? அதுவும் தவறிவிட்டது!

"நேற்றோடு நீ சொன்ன வார்த்தை... காற்றோடு போயாச்சு. வார்த்தை தவறிவிட்டாய்... அடிகண்ணம்மா...' பழைய பாடலின் வரிகள்... ஞாபகத்திற்கு வந்து அவளது இதயத்தை இரும்பு குண்டாய் கனக்க வைத்தன.

## 5

அன்று வெள்ளிக்கிழமை! பூஜை அறையிலிருந்து வந்த சந்தன ஊதுபத்தியின் மணம் வீட்டை நிறைத்துக் கொண்டிருந்தது.

அம்மா பார்வதி பக்கத்துத் தெருவிலிருந்த அம்மன் கோவிலுக்குச் சென்று விட்டிருந்தாள். மாலை மங்கி இருள் கவியும் நேரம்!

விளக்கேற்றும் போது வாசற் கதவை சாத்தக்கூடாது என்பதால் கதவைத் திறந்து வைத்திருந்தாள் அபர்ணா.

'சவுந்தரிய லகரியை மெல்ல முணுமுணுத்தபடி சோபாவில் சோர்வாய் வந்து அமர்ந்தாள்.

அம்மா அவளுக்காக பிளாஸ்கில் ஊற்றி வைத்திருந்த காபியைப் பருகக் கூட அவளுக்குப் பிடிக்கவில்லை.

அதீத கவலையா... நாக்கு கசந்து தொலைத்தது.

விழிகளை மூடி சோபாவில் சாய்ந்து அமர்ந்திருந்தவள்... வாசலில் பைக் தட தடத்து வந்து நிற்கும் சப்தம் கேட்டதும் தூக்கி வாரிப்போட்டபடி எழுந்தாள்.

‘இந்த நேரத்தில் வருவது யாராக இருக்கும்?’ நெற்றியில் புருவங்கள் முடிச்சுப் போட... வேக நடைபோட்டு வெளியில் எட்டிப் பார்த்தாள்.

ஹெல்மெட்டை மெல்லக் கழற்றியபடி ஏறிட்டவரைப் பார்த்ததும் அவளுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

வந்தவர் கணேஷ்ராம்! அரவிந்தின் அண்ணன்...

“அட... நீங்களா? வாங்க... வாங்க மாமா! நல்லாயிருக்கீங்களா மாமா? வீட்டுலே அக்கா, பசங்க எல்லோரும் சவுக்கியம்தானே?” முகம் மலர வரவேற்றாள்.

“நல்ல சவுக்கியம்தான் அபர்ணா! அம்மா நல்லா இருக்காங்களா? ஆளே அடியோட மாறிப் போயிட்ட மாதிரி இருக்கு... உனக்கு உடம்புக்கு ஒண்ணுமில்லையே?” சோபாவில் அமர்ந்தபடி பரிவுடன் கேட்டார்.

“அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல மாமா... நான் நல்லாதான் இருக்கேன். ஆபீஸ்லே இருந்து இப்பத்தான் வந்தேன். கொஞ்சம் டயர்டா இருந்துச்சு... அம்மா கோவிலுக்குப் போயிருக்காங்க... கொஞ்சம் சோர்வா இருந்ததாலே நான் அவங்க கூடப் போகலை... வேற ஒண்ணுமில்லை மாமா” இதமாய் முறுவலித்தாள்.

“அரவிந்த் எப்படியிருக்கான்?” கேள்விக் கணையைத் தொடுத்துவிட்டு அவளை ஊன்றிப் பார்த்தார் கணேஷ்ராம்.

“நல்லாயிருக்காரு... புராஜெக்ட் விஷயமா மும்பைக்குப் போயிருக்காரு மாமா...”

‘கணேஷ்ராம் திடுதிப்பென்று ஃபோன்கூட செய்யாமல் வந்து நிற்கிறார். மிக மிக முக்கியமான காரியம் இருந்தால்மட்டும்தான் மனிதர் தலையைக் காட்டுவது வழக்கம்!

முகம் பாறையாய் இறுகிக் கிடக்கிறது. முகத்தில் கடுகளவுகூட மலர்ச்சியைக் காணோமே?

விஷயம் என்னவாக இருக்கும்?’ எண்ணமிட்டபடியே அவரை ஏறிட்டாள்.

“மும்பைக்கா? உன்கிட்டேயும் அப்படித்தான் சொல்லிட்டுப் போயிருக்கானா? அவன் இப்படி மாறிப் போவான்னு... நான் கனவுலே கூட நினைக்கலைம்மா...

‘பொய்யே பேசத் தெரியாதவன்... என் தம்பி ஒரு சத்தியசீலன்’னு நான் பெருமையா எல்லோர்கிட்டேயும் இவனைப் பத்தி சொல்லிட்டிருந்தேன்... ப்ச்! அவன் மேல இருந்த நல்ல அபிப்பிராயமே காணாம போச்சு... கடந்த நாலு நாளா குழம்பித் தவிச்சுட்டு இருந்தேன்...

சரி! நீ ஒரு அப்பாவிப் பொண்ணு! உன்கிட்டே விஷயத்தை

மூடி மறைக்கிறது தப்புன்னு... என் மனசுக்குப்பட்டது. உன் காதுலே விஷயத்தைப் போட்டுடணும்னு கிளம்பி வந்துட்டேன்..."

"எ... என்ன விஷயம் மாமா?"

அவர் பீடிகை போடத் தொடங்கியதுமே... அவளுக்கு மெல்ல உதறல் எடுக்கத் தொடங்கிவிட்டது.

"நாலு நாள் முன்னாடி... வியாபார விஷயமா ஒருத்தரைப் பார்க்க... ஈரோட்டுக்குப் போயிருந்தேன். டீலிங்கை முடிச்சுட்டு, நானும் அவருமா ஒரு பெரிய ஓட்டலுக்கு டின்னர் சாப்பிடப் போனோம்... கலகலன்னு பேசிட்டே சாப்பிட்டுட்டு இருந்தோம்...

எங்களைக் கடந்து ஒரு ஜோடி ஃபேமிலி ரூமுக்குள்ளே போனாங்க... அப்போ அந்த நண்பர் என்கிட்டே... 'கணவன், மனைவின்னா இப்படித்தான் இருக்கணும். அந்தப் பொண்ணுக்கு உடம்புக்கு முடியலை போல... கைத்தாங்கலா அரவணைச்சு அக்கறையா அழைச்சுட்டு போறான்... பாருங்க'ன்னு சொன்னதும் நான் நிமிர்ந்து பார்த்தேன்.

அவங்களோட முதுகுப் பக்கத்தை மட்டும் தான் பார்க்க முடிஞ்சது. அடுத்த செகண்டே அவங்க ஃபேமிலி ரூமுக்குள்ளே புகுந்துட்டாங்க. எனக்கு அப்படியே தூக்கி வாரிப் போட்டுச்சு. என் கூடப் பிறந்த தம்பியை எனக்குத் தெரியாதா? அரவிந்தா இப்படி மாறிட்டான்னு அதிர்ந்தே போயிட்டேன்.

ஊர்ஜிதமா அது அரவிந்த் தானா?ன்னு தெரிஞ்சுக்கணும்னு தோணுச்சு... சாப்பிட்டு முடிச்சு நானும் அந்த நண்பரும் வெளியில வந்தோம். நண்பர் விடைபெற்றுப் போனதும்... மறுபடியும் அந்த ஹோட்டலுக்குள்ளே நுழைஞ்சேன். ஒரு ஓரமா டேபிள்கிட்டே உட்கார்ந்து வெயிட் பண்ணினேன்.

அந்த ஜோடி ஒரு வழியா வெளியே வந்தப்போ... பார்த்தேன். சாட்சாத் அரவிந்தேதான்! அவன் என்னை கவனிக்கலை. அழகான பொண்ணுகூட ஜோடியா சுத்தற சந்தோஷத்துல... தன்னைச் சுத்தி என்ன நடக்குதுன்னு யோசிக்கத் தவறிட்டான் போல...

'என்னடா கூத்து நடக்குது?'ன்னு போட்டு அவன் சட்டையைப் பிடிக்கலாமா?ன்னு மனசு பரபரன்னு இருந்துச்சு. பொது இடமாச்சேன்னு கஷ்டப்பட்டு கோபத்தை அடக்கிக்கிட்டேன். ரெண்டு பேரும் டாக்ஸியில் ஏறிப் போயிட்டாங்க... ஒரு கால்மணி நேரம் பொறுத்து அவனோட செல்லுக்கு ஃபோன் போட்டேன்.

'என்ன அண்ணா? நல்லாயிருக்கீங்களா? நான் இப்போ மும்பையில இருக்கேன். புராஜெக்ட் விஷயமா இங்க வந்திருக்கேன்'னு அப்பட்டமா பொய் சொன்னான். எனக்கு அப்படியே மனசு கசந்து போச்சு.

கண்ணுக்கு லட்சணமான மனைவி, நல்ல குணவதி வீட்டுலே இருக்கா... அவளுக்கு துரோகம் பண்ண... எப்படி மனசு வந்துச்சு?ன்னு கேட்க நாக்கு துடிச்சதும்மா... இது இதமா, பதமா கேட்க வேண்டிய சமாச்சாரம்! நாம்ப கோபத்துல அவசரப்பட்டு ஏதோ கேட்கப் போய்... பதிலுக்கு அவனும் துணிஞ்சு 'ஆமா... நான் அப்படித்தான்! இப்போ நீங்க என்ன செய்யப்போறதா உத்தேசம்?'னு எடுத்தெறிஞ்சு பேசிட்டா... என்ன பண்றது?ன்னு ஒரு பயம்!

இதுவரைக்கும் அவன் எதிர்த்துப் பேசாத பணிவான தம்பியாத்தான் இருந்திருக்கான்... ஆனா.. பொம்பளை சகவாசத்தால எல்லாம் தலைகீழா மாறிப்போச்சே? பொய் சொல்றான்... பொது எடத்துல நாலு பேர் பார்ப்பாங்களேங்கிற அச்சம் விட்டுப்போச்சு..."

மொத்தத்துலே அவனுக்கு குளிர்விட்டுப் போச்சும்மா..."

"மாமா! அவரோட ஜாடையில வேற யாரையோ பார்த்துட்டு... நீங்க அவரைத் தப்பா நெனக்கவும் வாய்ப்பு இருக்கே மாமா..."

மெல்லிய குரலில் முணுமுணுத்தாள் அபர்ணா.

"ஊகூம்! சான்ஸே இல்லம்மா... என் தம்பி! நான் தூக்கி வளர்த்தவன்... அவனை எனக்குத் தெரியாமல் போகுமா? கணவனை விட்டுக் கொடுக்காம பேசறே... சந்தோஷமா இருக்கு. உன் முகமே சரியில்லையே?

உனக்கு ஏதோ விஷயம் தெரிஞ்சிருக்கணும். பூசி மெழுகாம மனசை விட்டுப் பேசும்மா. நாம்ப கலந்து பேசி ஒரு முடிவுக்கு வரணும். அரவிந்தை தட்டிக் கேட்க வேணாமா? தகப்பனில்லாத பொண்ணு. ஒரேயொரு வயசான தாயார் தானே இருக்காங்க. நாம்ப என்ன செஞ்சாலும் வாய் மூடிக் கிடப்பாள்... நாதியே இல்லாதவள் தானே?'ன்னு... அவன் நெனச்சுட்டானா?

உனக்கு நான் இருக்கேன் அபர்ணா! ஒரு அண்ணன் ஸ்தானத்துல சொல்லப்போனா ஒரு அப்பா ஸ்தானத்துல நான் இருக்கேன்... உன் வாழ்க்கை பறிபோறதைப் பார்த்துட்டு... நான் சும்மா இருக்கமாட்டேன். அவன் எப்போ திரும்பி வர்றானாம்? ஏதாவது ஃபோன் பண்ணி சொன்னானா?"

"போன காரியம் முடிஞ்சுட்டா... உடனே கிளம்பி வந்துடுவாரு. எப்பவும் சொன்ன டேட்டுக்கு முன்கூட்டியே வந்துடுவாரு... மாமா! என் மேல உங்களுக்கு இருக்கிற அக்கறையை நெனச்சா.. ரொம்பவே பூரிப்பா இருக்கு...

இது வரைக்கும் நானும் அவரும் ரொம்ப அன்னியோன்யமா ஆதர்ச தம்பதிகளாத்தான் வாழ்ந்துட்டு வர்றோம். நிஜமாவே என் மனசுல எந்த நெருடலும் இல்ல... நீங்க சொல்றாப்பல அப்படியே ஏதாச்சும்

இருந்தாலும்... இந்த விஷயத்தைப் பத்தி நாங்களே பேசி ஒரு முடிவுக்கு வர்றதுதான் நல்லது மாமா!

நீங்க அவருக்கு அண்ணன் மட்டுமில்ல.. அதுக்கும் ஒருபடி மேலதான்... அவர் அந்தளவுக்கு உங்கமேல மரியாதை வச்சிருக்காரு. இருந்தாலும்... இது... கணவன், மனைவி ரெண்டுபேர் மட்டும் சம்பந்தப்பட்ட விஷயம்! நாங்க ரெண்டு பேரும் உட்கார்ந்து பேசிமுடிவெடுக்க வேண்டிய சமாச்சாரம் இது!

உட்கார்ந்து நிதானமா... பிரச்சினையோட மையப்புள்ளி எதுன்னு அலசி மனசுவிட்டுப் பேசினா... எந்தப் பிரச்சினைக்கும் ஒரு தீர்வு கிடைச்சுடும் இல்லையா? முதல்லே மனசு விட்டுப் பேசிப் பார்க்கிறேன் மாமா!

தேவைப்பட்டா கட்டாயம் உங்க உதவியை நாடுவேன். நல்ல காலமா... நீங்க இதைப் பத்திப் பேசினப்போ... அம்மா வீட்டுலே இல்ல... அம்மா வயசானவங்க. உடம்புக்கு முடியாதவங்க... அதிர்ச்சியைத் தாங்கற சக்தி அவங்களுக்கிடையாதுமாமா! அதான்... உங்க மனசு புண்படும்படியா... நான் ஏதாவது பேசியிருந்தா என்னை மன்னிச்சிடுங்க மாமா!

ஸ்ட்ராங்கா ஒரு காபி போட்டு எடுத்துட்டு வரட்டுமா மாமா?" பொங்கி வந்த கண்ணீரை... கண்களைச் சிமிட்டி உள்ளிழுத்தபடியே சிரித்த முகத்துடன் பேசியவளை மீண்டும் ஊன்றிப் பார்த்தார் கணேஷ்ராம்.

"சரிம்மா... உன் இஷ்டம் போல செய்... நீ அவனை எள்ளளவும் விட்டுக் கொடுக்காம பேசுவேன்னு... எனக்கு நல்லாவே தெரியும்... கல்யாணம் ஆகறதுக்கு முன்னாடியே... உனக்கும் உங்க அம்மாவுக்கும் அவன் மேல நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டுப் போச்சு இல்லையா?

கண்ணீர்லே தத்தளிச் சுட்டிருக்கிற உங்களை... தக்க தருணத்துல வந்து கை கொடுத்து தூக்கி விட்டுட்டான். உங்களைப் பொறுத்தவரை அவன் ஒரு ஆபத் பாந்தவன் இல்லையா? அந்த நன்றி உணர்ச்சி மேலோங்கி இருக்கிறதால தான்... உன்னால அவனை விட்டுக் கொடுக்க முடியலை... மனைவின்னா

## விரக்தி

கவிதை

புற்கள் நனைகிறதென்று
பனி தன் பணியை
நிறுத்துவதில்லை!

பூக்கள் கருகுகிறதென்று
ஆதவன் தன் வேலையை
நிறுத்துவதில்லை!

மனிதா,
நீ மட்டும் ஏன்
விரக்தி வந்துவிட்டதென்று
விழுந்து விடுகிறாய்....?

**- போளூர் சி.ரகுபதி.**



**க**ஜுராஹோவில் பர்ஸ்வநாத கோயிலில் காணப்படும் சிவன்– பார்வதி சிற்பம் இது.
- **க.ரவீந்திரன்**

இப்படித்தான் இருக்கணும்... சரி.. காபி கொண்டா... அவன் வந்ததும் நிதானமா பேசிப் பாரு...

உன் வாழ்க்கை கேள்விக் குறியாச் சுன்னா... நான் சும்மா வேடிக்கை பார்த்துட்டு இருக்கமாட்டேன். நீ எங்க வீட்டுக்கு வாழ வந்தவ... உன்னை அவன் நட்டாத்துல நிப்பாட்ட நான் அனுமதிக்க மாட்டேன்... புரிஞ்சுக்கோ!" சுட்டு விரலை நீட்டி எச்சரித்தார்.

"சரிங்க மாமா" பெருமூச்சு விட்டவாறே அடுக்களைக்குள் புகுந்தாள் அபர்ணா.

'வந்தவரை ஒரு வழியாக சமாளித்துவிட்டோம்' என்ற திருப்தி ஒரு மூலையில் தலைகாட்டியது நிஜம்!

பூதாகாரமாக விஸ்வரூபமெடுத்து மிரட்டும் பிரச்சினையை... எண்ணிப் பார்த்தாலே... வயிற்றில் புளியைக் கரைத்தாற் போல் இருந்தது.

## 6

"கண்ணீர்லே தத்தளிச்சுட்டிருக்கிற உங்களை தக்க தருணத்துல வந்து கை கொடுத்து தூக்கி விட்டுட்டான். உங்களைப் பொறுத்தவரை அவன் ஒரு 'ஆபத்பாந்தவன்' இல்லையா?..." என்று கணேஷ்ராம்கேட்ட கேள்வி... திரும்பத் திரும்ப அவளது செவிகளில் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

மாத்திரைகளின் உபயத்தில் படுக்கையில் சரிந்து படுத்த மாத்திரத்தில் அம்மா பார்வதி குறட்டை விட்டு உறங்கி விட்டிருந்தாள்.

இரவு விளக்கு சிந்திய மங்கலான வெளிச்சத்தில்... மாலையும் கழுத்துமாய் தானும் அரவிந்த்தும் மலர்ந்த முகத்துடன் எடுத்துக் கொண்ட புகைப்படத்தையே

வெறித்துக் கொண்டிருந்தாள் அபர்ணா.

அம்மாவின் அறையில் சுவரில் பெரிய சைஸில் அந்தப் புகைப்படம் மாட்டப்பட்டிருந்தது.

"அரவிந்த்... நீங்க ஆபத்பாந்தவனா வந்து என்னைக் காப்பாத்திட்டீங்க.. எங்களைப் பொறுத்தவரை நீங்க கண் கண்ட கடவுள்... தெரியுமா?" என்று கண்ணீர் மல்க எத்தனையோ முறை அவனது மார்பில் சாய்ந்தபடி நெகிழ்ந்து பேசி இருக்கிறாள்.

"ஆபத்பாந்தவன் தான்! நான் அந்த நன்றியை என்னிக்கும் மறக்கமாட்டேன் அரவிந்த்... நீங்க என்னைக் கைவிட்டு உதறிட்டுப் போனாலும் சரி... யார்கிட்டேயும் உங்களை நான் விட்டுக் கொடுக்கவே மாட்டேன். இது சத்தியம்" மெல்ல தனக்குள் முணுமுணுத்தவளின் நினைவலைகள்... மெதுவாகப் பின்னோக்கிச் சுழல ஆரம்பித்தன.

மகள் அபர்ணா படிப்பை முடித்த கையோடு... அவளுக்கு நல்ல வரனாகப் பார்த்துக் கரையேற்றிவிட்டால்... தன் பாரமே இறங்கிவிடும் என்று தவித்தாள் பார்வதி.

தரகர்களிடம் மகளின் ஜாதகத்தைக் கொடுத்து 'வரன் வேட்டை'யில் தீவிரமாக இறங்கிய தருணத்தில் தான்... அவளது தம்பி சந்தானம் முட்டுக்கட்டை போட ஆரம்பித்தான்.

"நான் ஒருத்தன் இருக்கையில்... வெளியில வரனைத் தேட ஆரம்பிச்சுட்டியே அக்கா? கூடப் பிறந்த தம்பியை எப்படிக்கா மறந்தே? அபர்ணாவை யாரோ ஒருத்தனுக்கு கட்டி வைக்கிறதை விட... எனக்கே கட்டி வச்சா... நீ கவலையில்லாம அக்கடான்னு எங்க கூடவே காலத்துக்கும் இருக்கலாம் இல்லையா?

என்னை உதாசீனம் பண்ணிட்டு வெளியில வரன் தேடறியே? உனக்கு எவ்ளோ நெஞ்சழுத்தம் இருக்கணும் அக்கா? இது உனக்கே நியாயமா படுதா? அபர்ணா எனக்காகவே பொறந்தவ... ஞாபகம் வச்சுக்கோ..."

கோபத்தில் பொரிந்து தள்ளினான் சந்தானம்.

ஆடிப்போய் விட்டாள் பார்வதி.

"டேய் தம்பி! என்னடா இது கூத்தா இருக்கு? உனக்கு புத்தி கித்தி கெட்டுப்போச்சா? அக்கா ஒருத்தி விதவையானவள். எவ்ளோ அரும்பாடுபட்டு இவளை வளர்த்து படிக்க வைச்சு ஆளாக்கியிருக்கேன். இதுநாள் வரைக்கும் படிப்புச் செலவுக்கோ... வேறு எதுக்காவது நான் உன்கிட்ட கை நீட்டி காசு வாங்கியிருப்பேனாடா?

தாய்மாமனா லட்சணமா... இந்தக் குடும்பத்துல தகப்பன் ஸ்தானத்துல இருந்து நீ தடபுடலா கல்யாண ஏற்பாடுகளை கவனிக்கிறதை விட்டுட்டு.. ஆம்பிளைத் துணை இல்லாத வீட்டுலே ஆராஜகமா பேசி, சண்டை

பிடிக்கிறியே சந்தானம்,

அபர்ணாவுக்கும் உனக்கும் எந்த விதத்துலேயாவது பொருத்தம் இருக்காடா? அவ படிச்சவ... நீ படிக்காதவன். உனக்கும் அவளுக்கும் எவ்ளோ வயசு வித்தியாசம்? எதையும் நெனைச்சுப் பார்க்காம எப்படி உன்னால துணிஞ்சு பேச முடியுது?"

தழுதழுத்தபடி கேட்டாள் பார்வதி.

"அபர்ணா என்னோட அக்கா மக... நான் அவளோட முறை மாமன்... அந்த உரிமை இருக்கிற துணிவுலே தான் நான் கேட்கிறேன்... என்ன இப்போ? என்னை மீறி எவன் வந்து அவ கழுத்துல தாலி கட்டுறான்னு நானும் பாத்துடறேன். அபர்ணாவோட கழுத்துல மூணு முடிச்சு போடப் போறவன்... நான்தான் அக்கா... அதுலே எந்த மாற்றமும் இருக்காது தெரிஞ்சுக்கோ... எந்தக் காலத்திலும் என்னோட உரிமையை நான் விட்டுத்தரவே மாட்டேன்" சவடாலாய் பேசிவிட்டு மார்தட்டினான் சந்தானம்.

அவனது முகத்தில் பிரதிபலித்த குரூரத்தையும் குரலில் தொனித்த உறுதியையும் கண்ட பார்வதிக்கு உள்ளுக்குள் திகில் ஊறியது.

கூடப் பிறந்த சகோதரி என்ற பாசம் துளி கூட இல்லையே? சொந்த தாய்மாமனே வில்லனாக முளைத்து விட்டானே? ஊர் உலகத்தில் ஏதாவது பிரச்சினை வந்தால்.. கூடப் பிறந்த அண்ணன் தம்பிகள் தான் வரிந்து கட்டிக் கொண்டு... ஆதரவாய் பரிந்து பேசுவார்கள். ஆனால் கூடப் பிறந்த தம்பியே மார்தட்டிக் கொண்டு வம்பு செய்தால்... யாரிடம் போய் இதை முறையிட முடியும்?

என்னைப் பெற்றவர்களும் உயிரோடு இல்லை... சொந்தக்காரர்கள் நான்கைந்து பேரை அழைத்து வந்து விவரம் சொல்லி நியாயம் கேட்க வேண்டியதுதான்! உள் மனம் உதித்த யோசனையை செயலாக்க முனைந்தபோது... மீண்டும் ஏமாற்றம் தான் முற்றுகையிட்டது.

"என்ன பார்வதி? அக்கா தம்பிக்குள்ளார பிரச்சினை எதுக்கு? சந்தானம் நீ தூக்கி வளர்த்த பிள்ளைதானே? முறைமாமன்கிற உரிமையை அவனும் விட்டுத் தர்றதா இல்லை... அவனுக்கென்ன வயசாயிடுச்சு? பார்க்க ஆஜானுபாகுவா தானே இருக்கான்?

அக்கா பொண்ணை கண் கலங்காம உள்ளங்கையில் வச்சுத் தாங்க தயாரா இருக்கான்... அப்புறம் என்ன? தரகரு மூலமா அமையற வரன் சரியில்லாம போயிட்டா... என்ன செய்வே? எந்தப் புத்துலே எந்தப் பாம்பு இருக்குன்னு... யாருக்குத் தெரியும்?

சந்தானத்துக்கே பொண்ணை கட்டிக் குடுத்துட்டு அக்கடான்னு நீயும் வீட்டோட இருக்கலாம் இல்லையா? காலமுச்சூடும் கஷ்டப்பட்டே...

இந்தக் கல்யாணத்துக்கு அப்புறமாவது நிம்மதியா கோவில் குளத்தைச் சுத்தி வரலாம்லே?

மனசு ஒத்துபோச்சுன்னா... வயசு வித்தியாசம், படிப்புங்கிற பேதத்துக்கு இடமே இல்லாம போயிடும் பார்வதி... நெருங்கின உறவுக்காரங்க நாங்க... எங்க முடிவைச் சொல்லிட்டோம். எங்களுக்கு நீயும் வேணும்.. சந்தானமும் வேணும்.

இதுக்கு மேலேயும்... வேற யாருகிட்டயாவது நியாயம் கேட்க நினைக்காதே பார்வதி! இது குடும்ப விவகாரம்... நீங்கதான் உட்கார்ந்து பேசி, இணக்கமா ஒரு முடிவுக்கு வரணும்...

அதை விட்டுட்டு அடுத்தவங்களை பஞ்சாயத்துக்கு கூப்பிட்டா... மல்லாந்து படுத்து எச்சி துப்பின கதையாயிடும். நல்லா யோசனை செய்... நாங்க சொல்றது நியாயம்னு... உனக்கே படும். அப்ப நாங்க கிளம்பறோம் பார்வதி! வரட்டுமா சந்தானம்?"

'ஒண்டிக்கட்டை, விதவை... நாதியற்றவள் பார்வதி. இவளுக்கு பரிந்து பேசினால்... சந்தானம் நம்மை உண்டு இல்லை என்று பண்ணிவிடுவான்' என்று பயந்து கொண்டு உறவுக்காரர்கள் நைஸாக கழன்று கொண்டதும்... பார்வதிக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது.

இருந்தாலும் துணிவையும் முயற்சியையும் கைவிடவில்லை. சந்தானத்திற்கு தெரியாமல் இரண்டு மூன்றுமுறை பெண் பார்க்கும் படலம் நடக்கத்தான் செய்தது.

ஆனால் விஷயத்தை எப்படியோ மோப்பம் பிடித்துக் கொண்டு மாப்பிள்ளை வீட்டுக்காரர்களை நேரில் சந்தித்து... "இத்தோட நிறுத்திக்க... நான் அவளுக்கு முறைமாமன்! அவ எனக்குத் தான் சொந்தம்... மீறி கட்டணும்னு நெனச்சாலே உங்க கழுத்தை வெட்டிட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன். ஜாக்கிரதை" உறுமி விட்டு வந்தான் சந்தானம்.

'தாய் மாமன் முரடன்... ரௌடி! எதற்கு வீண் வம்பு நமக்கு? என்று அவர்களும் இந்த திசைப்பக்கம் தலைவைத்துப் படுக்கவில்லை.

அனலிடைப் பட்ட புழுவாய் வேதனையில் தாய் பார்வதி துடிப்பதைப் பார்த்துவிட்டு... "அம்மா! ஏம்மா இப்படி கவலைப்படறீங்க? வயசுப் பொண்ணு வீட்டோட முடங்கிக் கிடந்தா... நீங்க வேதனைப் படறதிலே ஒரு அர்த்தம் இருக்கு... நானொரு சாஃப்ட்வேர் என்ஜினியர்... படிச்சு முடிச்ச கையோட வேலை கிடைச்சுடுச்சு. கை நிறைய சம்பாதிக்கிறேன். சொந்தக் கால்லே நிக்கிறேன்.

அப்புறம் என்னத்துக்கு இப்படி கவலைப்படறீங்க? மாமாவை மீறி எந்த வரனும் வராட்டி என்னம்மா? நான் இப்படியே இருந்துடறேம்மா... கல்யாணம்தான் வாழ்க்கைன்னு

தொடர்ச்சி 34-ம் பக்கம்

31-ம் பக்கத் தொடர்ச்சி

நெனக்காதேம்மா...” கண்ணீரைத் துடைத்து தாயை அணைத்துக் கொண்டு ஆறுதல் சொன்னாள் அபர்ணா.

மகளுக்கு திருமணமே ஆகாது என்று விரக்தியின் விளிம்பில் இருந்தபோது... கடைசியாகப் பெண் பார்க்க வந்தான் அரவிந்த்ராம்.

## 7

அம்மாவின் ஆத்ம திருப்திக்காக எளிய முறையில் தன்னை அலங்கரித்துக் கொண்டு கூடத்தில் வந்து நின்றாள் அபர்ணா.

அரவிந்த் தன் குடும்பத்தாருடன் பெண் பார்க்க வந்திருந்தான். பார்வையைத் தழைத்தபடி பொதுவாக வணக்கம் தெரிவித்துவிட்டு தூணோரமாய் நின்றாள்.

“இந்த வரன் தகையப் போவதே இல்லை. எதற்கு நேரத்தை வீணாக்க வேண்டும்? இதெல்லாம் தேவைதானா?” என்று அம்மாவிடம் கேட்டு விட அவளது நாக்கு துடித்தது.

‘அநாவசியமாய் நம்பிக்கையை வளர்த்துக் கொண்டு ஏமாற்றம் ஏற்பட்டால் கதறி அழுகிறாள். இந்த துக்கம் தேவைதானா?’ அம்மாவைப் பார்க்கவே பாவமாக இருந்தது.

இவளுக்கு நம்பிக்கை சுத்தமாக இல்லை. துணி கொண்டு துடைத்துவிட்ட தினுசில் மனதில் விரக்தி மண்ட நின்றிருந்தவள்... “பொண்ணை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு” என்று தேங்காயை உடைப்பதுபோல் பட்டவர்த்தனமாக அரவிந்த் தூக்கி வாரிப்போட்டது போல் நிமிர்ந்தாள்.

“எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கு... உங்களுக்கும் என்னைப் பிடிச்சிருந்தா... சொல்லுங்க. பெரியவங்க உடனடியா ஒரு முடிவுக்கு வருவாங்க... மனசுல இருக்கிறதை பளிச்சுனு உடைச்சுட்டுப் பேசிடறது நல்லது.

இதுலே எதுக்கு மூடு மந்திரம்? பொண்ணு வீட்டுக்காரங்களை அநாவசியமா டென்ஷன் படவச்சு... தவிக்க விடறதிலே எனக்கு உடன்பாடே இல்லை.

கண்காட்சிக்குப் போயி... ஒவ்வொரு பொம்மையா வேடிக்கை பார்த்துட்டுப்போற மாதிரி... பத்து, பன்னிரண்டு பொண்ணுங்களை பார்த்துட்டு வேண்டாம்னு கழிச்சுக் கட்டறது ரொம்பக் கொடுமையான விஷயம்ங்க...

அந்துப் பொண்ணுங்களோட மனசு எவ்வளவு காயப்படும்? நீங்க நான்

பார்க்க வந்த முதல் பொண்ணு... இந்த வரனையே முடிச்சுடணும்னு பிரியப்படறேன். நீங்களும் ஓபனா சொல்லிடுங்க. எங்க பேரண்ட்ஸ் தங்கமானவங்க. எதையும் எதிர்பார்க்கமாட்டாங்க.

உங்கம்மா உங்களைக் கஷ்டப்பட்டு படிக்க வச்சிருக்காங்க. கல்யாணத்துக்கு அப்புறமும் நீங்க விருப்பப்பட்டா... தாராளமா வேலைக்குப் போகலாம். படிச்ச படிப்பு வீணாகக் கூடாது பாருங்க... நான் பெண்மைக்கு ரொம்பவே மதிப்பு தர்றவன்...

உங்களுக்கும் பிடிச்சிருந்தா... நாங்க உரிமையா நிதானமா உட்கார்ந்து கை நனைச்சுட்டுப் போறோம். இல்லைன்னா... நோ பிராப்ளம்! பை சொல்லிட்டு கிளம்பிடறோம்"

நறுக்குத் தெறித்தாற் போல் துணிவாக வெளிப்படையாக இதமான குரலில் அவன் பேசியவிதம்... அபர்ணாவின் மனதைத் தொட்டுவிட்டது.

'எத்தனை முட்டுக்கட்டைகள் இருந்தாலும் தடைகளைத் தகர்த்து எறிந்துவிட்டு துணிந்து நம்மை இவர் கரம் பற்றி விடுவார்' என்ற நம்பிக்கை அவளுக்குள் கிளைவிட்டுப் படர்ந்தது.

"எ... எனக்கும் பிடிச்சிருக்கு" அவளும் பளிச்சென்று கூறியதுதான் தாமதம்...

"அப்போ நாங்களும் உங்க வீட்டு நளபாகத்தை டேஸ்ட் பண்ண ஆவலா இருக்கோம்" என்று அரவிந்த் கூற... குபீரென்று அங்கே சிரிப்பலை எழும்பியது.

தாம்பூலத் தட்டை மாற்றிக் கொண்டு... அரவிந்த்ராமின் தாயார் முத்தம்மாள் மல்லிகைச் சரத்தை எடுத்து வருங்கால மருமகளின் கூந்தலில் சூட்டிவிட்டதும் கலகலவென்று பேசியபடியே சாப்பிட அமர்ந்தனர்.

பூரித்துப் போனாள் பார்வதி. அம்மாவின் முகத்தில் பூத்த மலர்ச்சியைக் கண்டு மகிழ்ச்சியில் திளைத்தாள் அபர்ணா.

ஆனால்... இருவருக்குமே உள்ளூர 'திக் திக்' என்று மனம் அடித்துக் கொண்டுதான் இருந்தது.

'யாருக்கும் வாய்க்காத வரன்... நல்ல குணமான மாப்பிள்ளை அபர்ணாவுக்கேற்ற பெரிய படிப்பு... படிப்புக்கேற்ற பதவியில் கை நிறைய சம்பாதிப்பவர்...

உயரம், அழகு, நிறம் என்று அத்தனை விதத்திலும் பொருத்தம் இருக்கிறதே?

ஐயோ! இந்த வரனும் தட்டிப்போய் விடுமா? விஷயம் எப்படியும் சந்தானத்தின் செவிகளுக்கு எட்டி விடும்.

## கவிதைகள்

### தளர்வை அகற்று!

இளைஞனே!
காற்று வீசுவதற்கு
கால நேரம்
பார்ப்பதில்லை...
தெரியுமா உனக்கு?
தளர்வை அகற்றி
தளிர்நடை போடு...
முளைவிடும்
அப்போது வெற்றி!

### கற்க... நிற்க!

கற்க கசடற
கற்பவை கற்றபின்
நிற்க
எம்ப்ளாய்மெண்ட் வாசலில்!

- சி.ரகுபதி, போளூர்

மறுநிமிஷமே வீடு தேடிப் போய் மிரட்டி ரகளை செய்வானே? உயிருக்கு பயந்து கொண்டு இவரும் வேண்டாம் என்று நிராகரித்து விட்டால்...? என் மகள் காலமூச்சூடும் திருமணமே ஆகாமல் கன்னியாய் தனிமரமாய் நிற்க வேண்டியதுதானா?

பகவானே! எங்கள் மீது கருணை காட்டு... இந்த திருமணம் கட்டாயம் நடந்தே ஆக வேண்டும். பக்கத் துணையா இருந்து நல்லபடியா இந்தக் கல்யாணத்தை நடத்திக் கொடு ஐயனே!' மனமுருகப் பிரார்த்தனை செய்தாள் பார்வதி.

'இந்த வரனும் தட்டிப்போய் விட்டால்... அம்மா தாங்கிக் கொள் ளவே மாட்டாள். அடுத்தவர்களின் உணர்வுக்கு மதிப்பு கொடுக்கும் உன்னத மான மனிதர்... கண்ணியமானவர். மனதில் உள்ளதை உடைத்து வெளிப்படையாகப் பேசுபவர்.

பெரிய பதவியில் இருக்கிறோம் என்ற பந்தா சிறிதும் இல்லாமல் சகஜமாகப் பேசும் இவரை எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. மனதைத் தொட்டவரையே கணவராக அடை யும் பாக்கியம்... எனக்குக்கிட்ட வேண்டுமே?

இந்த வரன் தட்டிப்போனால்... அம்மாவால் மட்டுமென்ன, என்னாலேயே தாங்கிக்கொள்ள முடியாதே? பெரியவர்கள் தாம்பூலத் தட்டை மாற்றி எளிய முறையில் நிச்சயம் செய்து விட்டார்கள்.

நிச்சயம் வரைக்கும் வந்துவிட்டு திருமணம் நடக்காமல் நின்று போனால்... ஊரில் பலரும் பலவிதமாகப் பேசுவார்களே? எந்தத் தடங்கலும், இல்லாமல்... திருமணம் நடைபெற அருள் புரிய வேண்டும் பகவானே'

அபர்ணாவும் கண்ணீர் மல்க... உள்ளூர வேண்டிக் கொண்டாள்.

ஆனால்... நான்கே நாட்களில் தன் கைவரிசையைக் காட்டி அவர்களது சிறு நிம்மதியையும் குழி தோண்டிப் புதைத்தான் சந்தானம்.

"அக்கா! உனக்கொரு விஷயம் தெரியுமா? அந்தப் பெரியவங்களைப் பார்த்து மிரட்டிட்டு வந்திருக்கேன். இரண்டாவது புள்ளை அரவிந்துக்கு

கல்யாணம் பண்ற வரைக்கும் சமைச்சுப் போட்டுட்டுக் கூடவே இருக்காங்களாம்... மருமக வந்ததும் ஊர்லே இருக்கிற பூர்வீக வீட்டுக்குப் போயிடலாம்னு இருக்காங்களாம்... விஷயத்தைக் கேள்விப்பட்டேன்.

அபர்ணாவுக்கு தாய்மாமன்னு சொன்னதும் உள்ளே கூப்பிட்டு உட்கார வச்சு உபசரிச்சாங்க.. உங்க புள்ளைக்கு வேற பொண்ணைப் பார்த்து கட்டிவைங்க... தாலி ஒண்ணுதான் கட்டலை... மனசளவுலலே அபர்ணா என் சம்சாரம்! அவ எனக்காகவே பொறந்தவ...

விலகிப் போயிடுங்க... இல்லேன்னா விளைவு விபரீதமா இருக்கும். உங்க புள்ளைகிட்ட ஸ்ட்ராங்கா சொல்லிப் புரிய வச்சிடுங்க.. விலகாம அடம்புடிச்சா.. அரிவாளால ஒரே சீவுதான்... தலையை தனியா உருட்டிடுவேன். அபர்ணா என்னை உயிருக்கு உயிரா நேசிக்கிறா தெரியுமா? உங்க புள்ளைக்கு வேற பொண்ணைப் பாருங்க... அதுதான் உங்க குடும்பத்துக்கு நல்லது...' அப்படின்னு எச்சரிக்கை பண்ணிட்டு வந்திருக்கேன்... என்னை மீறி உன் பொண்ணை யாருக்காவது கட்டித்தர விட்டுருவேனா அக்கா...

நீயே போராடிப் பார்த்து ஓய்ஞ்சு போய்... 'தம்பி! என் பொண்ணை கட்டிக்கோடான்னு எங்கிட்ட வந்து கெஞ்சத்தான் போறே... பாாத்துக்கிட்டே இரு" என்று வாசல்படியில் நின்றவாறே உச்சஸ்தாயியில் இரைந்து பேசிவிட்டு கடகடவென்று நகைத்தான் சந்தானம்.

மாலை அலுவலகம் முடிந்து அப்போதுதான் வீடு திரும்பி இருந்தாள் அபர்ணா. மாமன் பேசியதைக் கேட்டதும்... ஏமாற்றத்தாலும் அவமானத்தாலும் தேகமே குப்பென்று தீப்பற்றிக் கொண்டதைப் போல திகுதிகுவென்று அவளுக்கு எரிய ஆரம்பித்தது.

கை கால்கள் வெட வெடத்தன. பொங்கி வந்த கண்ணீரை கீழுதட்டை அழுந்தக் கடித்து அடக்கியபடி... நடுங்கும் விரல்களால் ஆதரவாய் தூணைப் பற்றிக் கொண்டாள்.

"அடப்பாவி! அபர்ணா அப்பா இல்லாத பொண்ணுடா... அவ நீ தூக்கி வளர்த்த பொண்ணுடா... ஈவு இரக்கமில்லாத பாவி... அவ வாழ்க்கையில இப்படி மண்ணையள்ளிப் போடறியேடா... நீ நல்லா இருப்பியா?" ஆத்திரமும் அழுகையும் வெடிக்கப் பேசிய பார்வதியைத் தடுத்தாள் அபர்ணா.

"அம்மா! நீ எதுவும் பேசாதேம்மா... நீ பேசப்பேச அவருக்கு இன்னும் குடிவெறியும் வேகமும் கூடத்தான் செய்யும். வாசற்படியில நின்னு வேற கத்தறாரு... அக்கம்பக்கத்துல வேடிக்கை பார்ப்பாங்க. அமைதியா இரும்மா... கொஞ்ச நேரத்துல வெறி அடங்கியதும் போயிடுவாரு... குடிபோதையில இருக்கிறவரு கிட்டே நியாயத்தைப் பத்திப் பேசினா... அது எடுபடுமா அம்மா? வழக்கம் போல் வரணைத் தட்டிவிட்டுட்டாரு.

அழாதேம்மா... மனசைத் தேத்திக்கோ... நடக்கிறது நடக்கட்டும்" மெல்லிய குரலில் அம்மாவைத் தேற்றினாள்.

"எப்பேர்ப்பட்ட வரன்? நிச்சயம் வேற ஆயிடுச்சே? எல்லாத்தையும் கெடுத்து குட்டிச் சுவராக்கிட்டானே... பாவி! நிச்சயமானதும் எப்படியும் கல்யாணத்தை நடத்திடலாம்னு இருந்தேனே?

ஐயோ! ராஜாத்தி உன் கதி இப்படியா ஆகணும்? சொந்தத் தாய் மாமனே படியேறிப் போயி... உன்னைப் பத்தி நா கூசாம அபாண்டம் சொன்னா... அவங்க நம்பாம இருப்பாங்களா?

இருக்கிற இடம் தெரியாம இதுநாள் வரைக்கும் வாழ்ந்தோம். ஊரு உலகம் பேசி சிரிக்கும்படி பண்ணிட்டானே? என்னால தாங்க முடியலையே..."

அதீத அதிர்ச்சயால் தலை சுற்றிக்கொண்டு வர... பொத்தென்று மயங்கிச் சரிந்தாள் பார்வதி.

அக்காள் மயங்கிச் சரிந்ததைக் கூடப் பொருட்படுத்தாமல்... வெற்றிக் களிப்புடன் தெருவில் இறங்கி நடந்தான் சந்தானம்.

"ஐயோ அம்மா!" பதறியடித்து ஓடிவந்து தாயின் முகத்தில் ஆறாகப் பெருகிய வியர்வையைத் துடைத்தாள் அபர்ணா.

ஏற்கனவே பார்வதிக்கு இரத்த அழுத்த வியாதி உண்டு. அதிர்ச்சியில் பி.பி. எகிறி விட்டது.

திகிலில் அபர்ணாவுக்கு கை, கால்கள் ஓடவில்லை.

## 8

ஆஸ்பத்திரியில் டாக்டரிடம் காட்டி ஊசி போட்டதும் மருந்து மாத்திரைகளின் உபயத்தில் நிம்மதியாக உறங்கிப் போனாள் பார்வதி.

இரவெல்லாம் தாயின் அருகிலேயே அமர்ந்து மவுனமாக கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்ததால்... அபர்ணாவின் முகமே ஊதிப்போயிருந்தது. இமைகள் இரண்டும் ஏகத்திற்கும் சிவந்து வீங்கிக் கிடந்தன.

மறுநாள் அலுவலகத்திற்குச் செல்லாமல் விடுமுறை எடுத்துக் கொண்டு... அடுக்களையில் சமைத்துக் கொண்டிருந்தாள்.

பார்வதி மெல்ல எழுந்து பாத்ரூமுக்குச் சென்றுவிட்டு வந்து அடுக்களையில் எட்டிப் பார்த்தாள்.

"மணி எட்டாகப் போகுது. இன்னும் தலைக் கூட வாராம இருக்கே? நேரமாகுதே அபர்ணா? ஆபீசுக்குப் போகலையா?"

"இன்னிக்கு நான் போகலைம்மா. லீவு சொல்லிட்டேன். இட்லி சூடா

இருக்கு. சாப்பிட்டுட்டு மாத்திரை போட்டுக்கிறியாம்மா?” தக்காளி சட்னிக்கு தாளித்துக் கொட்டியபடி இதமாக முறுவலித்தாள்.

“மாத்திரை போட்டு என்னத்தை சாதிக்கப் போறேன்? ஒண்ணே ஒண்ணு... கண்ணே கண்ணுன்னு நீ இருக்கே... உன்னை காலத்துக்கும் தனி மரமா நிக்க வச்சுப் பார்க்கணும்னு... என் தலையில எழுதியிருக்கே?

என் வயித்துல பிறந்த பாவத்துக்கு தான் உனக்கு இந்த நிலைமை வந்திருக்கு ராஜாத்தி... என் மனசாட்சி அறுக்குதே! இதுக்குப் பேசாம

**ஐ**க்கிய நாடுகள் சபையின் அகதிகள் அமைப்பின் பிரதிநிதியாக ஹாலிவுட் நடிகை ஏஞ்சலினா ஜோலி நியமிக்கப்பட்டுள்ளார். சமீபத்தில் இவர் டமாஸ்கஸ் நகரில் இராக்கிய குழந்தை அதிகளைச் சந்தித்தார்.
- க.ரவீந்திரன்



பகவான் என் உயிரை எடுத்துட்டுப் போயிடக்கூடாதா?” முந்தானையால் வாயை மூடியபடி குமுறினாள் பார்வதி.

“ஐயோ! அம்... அம்மா! என்னம்மா இது? நேத்து டாக்டர் சொன்னதை மறந்துட்டியாம்மா? பி.பி. அளவுக்கு அதிகமா இருக்கு... எதுக்கும் கவலைப்படக்கூடாது. டென்ஷன் ஆகக்கூடாதுன்னு சொன்னாருல்ல? மனசை ரிலாக்ஸ்டா வச்சுக்கோம்மா... ப்ளீஸ்!

எனக்கு உன்னை விட்டா வேற யாரும்மா இருக்காங்க? எனக்காக நீ திடமா தெம்பா இருக்க வேணாமா? ப்ளீஸ்... கண்டதையும் நெனச்சு மனசைப் போட்டு வருத்திக்காதே... சாப்பிட்டுட்டு மாத்திரை போட்டுக்கோ”

“எப்படிம்மா வருத்தப்படாம நானிருக்க முடியும்? என்னைவிட்டா உனக்கு வேற கதி இருக்கா? இந்தப் படுபாவி சந்தானம்... கூடப் பிறந்த பாவி... என் குடியைக் கெடுத்துட்டானே? உனக்கு விடிவு காலமே பொறக்காது போலிருக்கே ராஜாத்தி?” புலம்பிக் கொண்டே இருந்தவளுக்கு கண்கள் சொருகிக் கொண்டு வர... தள்ளாடி விழப் பார்த்தவளை... பாய்ந்து வந்து தாங்கினாள் அபர்ணா.

“அ... அம்மா! இப்படி அழுதழுதே உன் உடம்பைக் கெடுத்துக் கிட்டியேம்மா? இப்படியே விட்டா... ஹார்ட் அட்டாக்குலே கொண்டு விட்டுரும்னு டாக்டர் சொன்னதிலேர்ந்து... எனக்கு உயிரே இல்ல... என்னைப் பாரும்மா” அம்மாவை மெல்லக் கைத்தாங்கலாக சோபாவில் அமர வைத்தாள்.

அவளது முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்தவள்... வாசலில் நிழலாடியதும் சட்டென்று திரும்பிப் பார்த்தாள். அரவிந்தராம்!

‘இவர் எதற்கு இந்த நேரத்தில் வந்து நிற்கிறார்? இந்தக் கல்யாணத்தில் எங்களுக்கு இஷ்டம் இல்லை... அதனால் நிறுத்திவிடலாம்’ என்ற சங்கதியைச் சொல்ல வந்திருக்கிறார் போலும்!

அம்மாவின் நிலைமை வேற மோசமாயிருக்கிறது. நல்ல நேரம் பார்த்து மனிதர் வந்து நிற்கிறாரே?’ உள்ளூர நொந்து போனாள்.

“வாங்க... அம்மாவுக்கு உடம்பு முடியலை. நேத்தைக்கு இருந்து இப்படித்தான் பொத்து பொத்துன்னு மயங்கி விழுந்துடறாங்க...” தழுதழுத்தபடி கூறினாள்.

“அடக் கடவுளே! டாக்டர் கிட்டே காட்டினீங்களா... இல்லையா? போங்க... சீக்கிரமா தண்ணி எடுத்துட்டு வாங்க... அந்த ஃபேனை ஆன் பண்ணுங்க... காத்தோட்டமா இருக்கணும்... எப்படி வியர்த்துக் கொட்டுது பாருங்க?” நான்கே பாய்ச்சலில் உள்ளே நுழைந்தவன், சட்டென்று பார்வதியின் அருகில் அமர்ந்து...தனது கர்ச்சீப்பால் துடைத்துவிட்டான்.

அபர்ணா கொண்டு வந்த சொம்பை வாங்கி... பார்வதியின் முகத்தில் ‘சளப்.. சளப்’ தண்ணீரைத் தெளித்தான்.

“டா... டாக்டர் பி.பி. ஜாஸ்தியா இருக்குன்னு இன்ஜெக்ஷன் போட்டு மாத்திரை குடுத்திருக்காரு... டென்ஷன் படக்கூடாதுன்னு வார்ன் பண்ணியிருக்காரு”



**ஆ**ந்திர மாநிலம் மேற்கு கோதாவரி மாவட்டத்தை சேர்ந்த வட்லூருவில் விவசாயி ஒருவர் ஆடுகள் பூட்டிய வண்டியில் பயணம் செய்து அசத்துகிறார்!
- க.ரவீந்திரன்

முணுமுணுத்தவளை ஊன்றிப் பார்த்தான் அரவிந்த்.

"இதுக்கு மேல நீ ஒண்ணும் சொல்ல வேணாம். எனக்கு எல்லாம் புரிஞ்சுபோச்சு" திடுதிப்பென்று அவன் ஒருமையில் உரிமையாய் தன்னிடம் பேசியதைக் கேட்டதும்... புருவங்கள் முடிச்சுப் போட அலங்க மலங்க விழித்தாள் அபர்ணா.

இமைகளை மெல்லப் பிரித்து பார்வையால் கூடத்தை வலம் வந்தாள் பார்வதி. அபர்ணாவின் கையிலிருந்த டவலை வாங்கி வெகு உரிமையாய் தன் முகத்தில் வழிந்த நீரை சிரத்தையாய் துடைத்துவிட்டபடி "இப்போ எப்படியிருக்கு அத்தை?" என்ற அரவிந்தைப் பார்த்ததும்... 'இது கனவா? இல்லை நனவா?' என்ற ஐயம் தான் தலைதூக்கியது.

"என்னத்தை இப்படி இருக்கீங்க? அடுத்த முகூர்த்தத்திலேயே கல்யாணம் வச்சிருக்கோம்... கோவில்ல வச்சு எளிய முறையில கல்யாணம் நடந்தாப் போதும்னாலும்... பத்திரிகை விநியோகம் பண்றதுக்கு... நீங்க நாலு எடத்துக்கு அலைஞ்சுதானே ஆகணும்.

பத்திரிகை 'ப்ரூஃப்' எடுத்துட்டு வந்திருக்கேன். ரெண்டு வீட்டுக்கும் சேர்த்து பொதுவா அழைக்கிற மாதிரி அடிச்சாச்சு... பிடிச்சிருக்கா பாருங்க அத்தை! ஒரே பொண்ணுக்கு நடக்கப்போற கல்யாணம்! தெம்பா, சுறுசுறுப்பா நீங்க நடமாடுவீங்கன்னு பார்த்தா... இப்படி சோர்வா இருக்கீங்களே அத்தே?"

"மா... மாப்பிள்ளை! நீங்க பேசினதைக் கேட்டதும் அப்படியே என் வயித்துல பாலை வார்த்தாப்பல இருக்குப்பா... அத்தேன்னு உரிமையா நீங்க கூப்பிட்டதைக் கேட்டதுமே... மனசுக்குள்ளே ஆயிரம் யானை பலம் வந்தது மாதிரி இருக்கு... ரொம்ப சந்தோஷம் மாப்பிள்ளை" பார்வதி சந்தோஷக் கண்ணீருடன் கையெடுத்துக் கும்பிட்டாள்.

சட்டென்று அவளது கரங்களைப் பற்றினான் அரவிந்த்.

"நீங்க பெரியவங்க.. எங்களை ஆசீர்வாதம் தான் நீங்க பண்ணணும்... நான் இந்த வீட்டு மாப்பிள்ளை மட்டுமில்ல... பிள்ளையும்கூட... பிள்ளையை வாழ்த்தலாம்... வணங்கக்கூடாது... சரியா?"

"நடக்கிறதெல்லாம் கனவா? நிஜமா?ன்னு சந்தேகமா இருக்கு மாப்பிள்ளை... இனிமே பாருங்க... கால்லே சக்கரத்தை மாட்டிக்காத குறையா இறக்கை கட்டிப் பறக்கப்போறன். எல்லா வியாதியும் பஞ்சா பறந்துடுச்சு...

என்ன அபர்ணா? ஸ்தம்பிச்சுப் போய் அப்படியே வேடிக்கை பார்த்துட்டிருந்தா என்ன அர்த்தம்? மாப்பிள்ளை வந்திருக்காருல்ல? காபி, டிபனுக்கு ஏற்பாடு பண்ண வேணாம்? காலைக்கு என்ன செய்திருக்கே?"

“இட்லி... வெறும் தக்காளி சட்னி மட்டும்தான் அம்மா” தயங்கி பதிலளித்தாள்.

“மாப்பிள்ளை பத்திரிகை மாதிரி காட்ட வந்திருக்காரு. நீங்க ரெண்டு பேரும் பேசிட்டிருங்க... நான் பத்தே நிமிஷத்துல மணக்க மணக்க வெங்காய சாம்பார், இட்லிப்பொடி, எள்ளுப்பொடி எல்லாம் ரெடி பண்ணிடறேன்...”

முந்தானையை வரிந்து இடுப்பில் சொருகிக் கொண்டு பரபரப்புடன் எழுந்தாள் பார்வதி.

“அத்தே... உடம்பைப்போட்டு அலட்டிக்க வேணாம். எனக்கு ராஜ உபசாரம் பண்ணத் தேவையில்லை... நான் உங்க பிள்ளை தான்! இருக்கிறதை திருப்தியா சாப்பிட்டுட்டுப் போறேன்...”

“உங்களைப் பார்த்ததுமே எனக்கு பன்மடங்கு பலம் வந்தாச்சு மாப்பிள்ளை... என் திருப்திக்கு நான் பண்றதை தடுக்காதீங்க...” அவசரமாய் அடுக்களைக்குள் நுழையப் போனபோது... அந்தக் குரல் அவளைத் தடை செய்தது.

“என்ன? எல்லாருக்கும் குஷி பிய்ச்சுட்டுப் போகுதா? கழுகுக்கு மூக்குல வேர்க்கிற மாதிரி... எப்படி சரியான நேரத்துக்கு வந்துட்டேன். பார்த்தீங்களா? எவ்ளோ தைரியம்? என்னை அடியோடு மறந்துட்டீங்களா?” என்றபடி நிலைப்படியில் வந்து நின்று அனைவரையும் முறைத்தான் சந்தானம்.

தாயும் மகளும் திகிலுடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

## 9

அபர்ணாவின் அழகிய முகத்தில் பீதி படர்ந்தது.

‘ஐயோ! வீடு தேடி வந்திருக்கும் அரவிந்தை... மாமா சந்தானம் ஏடாகூடமாக திட்டி அவமானப்படுத்திவிட்டால்...?

அதீத கோபத்தில் பொறாமையில் வெந்து கை நீட்டி விட்டால்...? வீடு தேடி வந்து அம்மாவின் மனதைக் குளிரவைத்த உத்தமர்... அவமானத்திற்கு ஆளாவதை எப்படி சகிக்க முடியும்?’

அடி வயிற்றில் ஒரு பயப் பந்து வேகமாய் உருண்டது.

“உ... உன்னைக் கையெடுத்துக் கும்பிட்டுக்கிறேன் தம்பி! அதுவா இருந்தாலும் அப்புறமா பேசிக்கலாம்... வீடு தேடி வந்திருக்கிற அரவிந்த் தம்பி முன்னாடி எதையும் பேச வேணாம்... உன்னைத் தூக்கி வளர்த்த அக்காவுக்காக... தயவு செய்து...” கையெடுத்துக் கும்பிட்டவாறே பார்வதி

அவனருகே சென்றாள்.

சட்டென்று இடைபுகுந்தான் அரவிந்த்ராம்.

“அத்தே! தூக்கி வளர்த்த தம்பி கிட்டே கெஞ்சிட்டிருக்கீங்களே? இப்படி நகருங்க... மிஸ்டர்! நீங்க எங்க வீட்டுக்கு வந்து மிரட்டிட்டுப் போனீங்களாமே? எங்கம்மா, அப்பா சொன்னாங்க... என்னிக்கு இந்த வீட்டுக்கு வந்து நிச்சயம் பண்ணிட்டுப் போனோமோ... அன்னிக்கு இருந்து நான் இந்த வீட்டைச் சேர்ந்தவன் ஆயிட்டேன்.

இதுநாள் வரைக்கும் நடந்த கதை வேற... அபர்ணாவைப் பொண்ணு பார்த்துட்டுப் போனவங்களோட வீடு தேடிப் போயி... நீங்க மிரட்டி இருக்கலாம்... அது எல்லாம் அப்போ நடந்த சமாச்சாரம்... நிச்சயதார்த்தம் நடந்தது உங்களுக்குத் தெரியுமில்லையா? பாதிக் கல்யாணம் நடந்த மாதிரிதான்... அபர்ணா என்னோட மனைவி! அதுலே எந்த மாற்றமும் இல்லை...

உங்க உருட்டல் மிரட்டலுக்கு பயப்படறவன் நான் இல்ல... என் நண்பனோட அப்பா கமிஷனர்தான்! அவர்கிட்டே உன்னை உள்ளே தள்ளி பெண்டை நிமித்தி கம்பி எண்ண வைக்க... என்னால முடியும்! என் சொந்த விஷயத்துக்காக அவரோட உதவியை நாட நான் தயாரா இல்லை.

இவங்க என் அத்தை... இவங்க பொண்ணு அபர்ணா என் மனைவி. இது என் வீடு! அபர்ணாவை சொந்தம் கொண்டாடுவேன்’னு அடம்பிடிச்சு நீ ஒரு அடி எடுத்து வச்சாலும்... உன்னை மாறுகால் மாறு கை வாங்கிடுவேன்.

ஆம்பிளைத்துணை இல்லாத வீடுன்னு.. ஆட்டம் போடறியா ராஸ்கல்! மென்னியை முறிச்சிடுவேன். கராத்தே, குங்ஃபூ எல்லாத்தையும் நானும் கத்து வச்சிருக்கேன். பொம்பளைங்ககிட்டே வந்து பூச்சி காட்டறியே... வெட்கமா இல்ல?

இன்னிக்கோட இந்த வீட்டுக்கு வர்றதை நிறுத்திக்கோ... இந்தத் தெருப் பக்கம்கூட நீ தலை வச்சுப் படுக்காதே... மீறி வாலாட்டினே... இந்த வீட்டு

## கவிதைகள்

### நீதிபதி

அவளும்
அந்த
நீதிபதியைப் போன்றவளே...
தன் இதயத் தீர்ப்பை
சீக்கிரத்தில்
சொல்ல மாட்டாள்...!

### இரத்த வங்கி

ஏழைகள்
அடிக்கடி
டெபாசிட்
செய்ய வரும்
ஒரே வங்கி!

- போளூர் சி.ரகுபதி

மருமகன்கிற உரிமையில... தூக்கிப்போட்டு துவம்சம் பண்ணிடுவேன்... ஜாக்கிரதை!...”

‘பார்க்க சாதுவாக சாந்தமாக இருக்கிறானே? மிரட்டினால் பயந்து விலகி விடுவான்... நாளடைவில் அபர்ணாவை நமக்கே சொந்தமாக்கிக் கொள்ளவேண்டியதுதான்!’ என்ற நப்பாசையில் இருந்த சந்தானத்திற்கு ஏமாற்றம் முற்றுகையிட்டது.


ஆசையில் மண்ணள்ளிப் போட்டதோடு அரவிந்த்... சிம்ம சொப்பனமாய் கர்ஜித்து மிரட்டுவான் என்று அவன் கனவில்கூட கருதவில்லையே?

பெட்டிப் பாம்பாக அடங்கி, வந்த சுவடு தெரியாமல் மெல்ல நடையைக் கட்டினான்.

“நாம் பயந்து ஓடும் வரைதான்... நாய்கூட நம்மை துரத்திக் கொண்டு வரும். திரும்பி நின்று தைரியத்துடன் கையை உயர்த்தினாலே... பதுங்கி நாய் புறமுதுகு காட்டி ஓடி விடும்னு.. நீ படிச்ச பொண்ணுதானே?... இதைப் பத்தி நீ படிச்சிருப்பியே?

‘உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை... அச்சமில்லை... அச்சமென்பது இல்லையே... பாரதி கண்ட புதுமைப் பெண்ணா இருக்க வேண்டாமா அபர்ணா?

மகளிர் போலீஸ் ஸ்டேஷன்லே நேரா போயி... ஒரு கம்ப்ளைண்ட் பண்ணியிருந்தா போதுமே?



**ந**டிகை ஐஸ்வர்யாராய் ‘கர்வ சாத்’ என்ற விரதத்தை திருமணமானதிலிருந்து கடந்த இரண்டு ஆண்டுகளாக வீட்டிலேயே கடைப்பிடித்தார். இந்த ஆண்டு இந்த விரதத்தின்போது இராவணா படப்பிடிப்பிலிருந்தார். எனினும் விரதத்தை கடைப்பிடித்து அன்று உண்ணா நோன்பு இருந்தாராம்.

**- க.ரவீந்திரன்**

அவனை லாக்கப்புலே போட்டு நாலு தட்டி தட்டியிருந்தா, பிரச்சினை இவ்ளோ தூரத்துக்கு வந்திருக்காது இல்லையா?

அத்தை எவ்ளோ மனஉளைச்சலுக்கு ஆளாயிட்டாங்க... பாவம்! பொறுமையா இருக்கிறதுக்கும் ஒரு அளவு இருக்கு... லிமிட்டைத் தாண்டிட்டா... பொறுமைக்கே பெருமை இல்லாம போயிடுமே?"

"நீங்க சொல்றது வாஸ்தவம் தான். ஆயிரம்தான் இருந்தாலும் இது நம்ம குடும்ப விஷயம்... மாமா தான் புத்திகெட்டுப் போய் இப்படி பண்றாரு... நாமளும் பதிலுக்கு அவரைப் பத்தி போலீஸ்லே புகார் கொடுக்கலாம்... அதுக்கு நிமிஷ நேரம் போதும்தான்..

நாலு சுவத்துக்குள்ளே இருக்கிற இடம் தெரியாம அமைதியா அடக்கமா இது காலம் வரை வாழ்ந்தாச்சு... நல்ல பண்பான பரம்பரையில பிறந்துட்டு... குடும்ப விவகாரத்தை போலீஸ் ஸ்டேஷன் வரை கொண்டு போகணுமா?ன்னு தோணுச்சு...

அம்மாவும் அதைப் பத்தி ரொம்பவே கவலைப்பட்டதாலதான்... நானும் அமைதியா இருந்தேன். கடவுள் மேல பாரத்தைப்போட்டு பொறுமையா இதுநாள் வரை இருந்தது... நல்லதாப் போச்சு!

பகவான் உங்க ரூபத்துல வந்து பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வச்சுட்டாரே?" மலர்ந்த முகத்துடன் நிதானமாக பதிலளித்தவளைப் பார்த்து புன்னகை பூத்தான் அரவிந்த்.

"இந்தக் காலத்துல இப்படியொரு பொறுமைசாலியைப் பார்க்கிறது ரொம்ப அபூர்வம். உன்னோட பொறுமை, நிதானம், சகிப்புத்தன்மை, அடக்கம், பணிவு... எல்லாமே பிரமிக்க வைக்கிறாப்பல இருக்கு. இந்தக் காலத்துல இப்படிப்பட்ட பெண்ணை எங்கேயும் பார்க்கவே முடியாது. அத்தை உன்னை ரொம்ப அருமையா வளர்த்து ஆளாக்கியிருக்காங்க..."

பாராட்டுப் பத்திரம் வாசித்ததும் குப்பென்று முகம் சிவந்து போனாள் அபர்ணா.

"பொண்ணா பொறந்தாலே இப்படித்தானே இருந்தாகணும்? இப்படி இருந்தாத்தானே ஒரு பொண்ணுக்கு பெருமை... பிறந்தகத்துக்கும் புக்ககத்துக்கும் பெருமை தேடித் தர்றது ஒரு பொண்ணோட கடமையில்லையா? 'ஒரு பொண்ணு சரியா இருந்துட்டா... அந்தக் குடும்பமே சரியா இருக்கும்'னு பெரியவங்க சும்மாவா சொல்லி வச்சாங்க?

ஆனா... நாலு எழுந்து படிச்சுட்டு வந்துட்டாலே... ஒரு சில பொண்ணுங்களுக்கு தலை, கால் புரியறதே இல்ல... பெத்தவங்களையும், பெரியவங்களையும் மதிக்காம எடுத்தெறிஞ்சு பேசறாங்க. அபர்ணா

அப்படியில்ல... நான் இட்ட கோட்டைத் தாண்டமாட்டா... ரொம்ப அடக்கமான பொண்ணு... இவளை மகளாக அடைய நான்தான் கொடுத்து வச்சிருக்கணும்" கண்கள் பனிக்கப் பேசினாள் பார்வதி.

"என்னம்மா நீயும் சேர்ந்துகிட்டு புகழாரம் சூட்டத் தொடங்கிட்டே? நியாயமா நாம்ப அவரைத்தான் பாராட்டணும். கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி மயங்கி விழுந்த உன்னை... எப்படி தெம்பா, தைரியமா பேச வச்சுட்டாரு பாத்தியா?" என்றபடி அரவிந்தை ஏறிட்டாள்.

நான்கு விழிகளும் நேசமாய் மோதிக் கொண்டன.

"இதிலென்ன அதிசயம் இருக்கு அபர்ணா? அத்தைக்கு ஒண்ணுமே இல்ல... அளவுக்கு அதிகமான கவலை, அதிர்ச்சிதான் நோய்களுக்கு மூல காரணம்.. அந்தக் கவலையைப் போக்கிட்டா... ஐ மீன் மனசுலே இருக்கிற பாரம் குறைஞ்சுட்டா... உடம்புக்கு ஒண்ணுமே வராது"

"நீங்க தன்னடக்கமா பேசறீங்க... ஆபத்பாந்தவனா வந்து எங்க அம்மாவை மீட்டுக் கொடுத்திருக்கீங்க... இதுக்கு நான் எப்படி நன்றி..." அவள் கூறி முடிப்பதற்குள் இடைபுகுந்தான் அரவிந்த்.

"எனக்கு மாலை சூட்டி தர்ம பத்தினியாகி கால முச்சூடும் என்னோட வாழ்ந்து இந்த நன்றிக் கடனைத் தீர்ப்பாயாக"

வரமளிக்கும் தெய்வம்போல் அபயகரத்தை நீட்டி அவன் பேசியதைக் கேட்டதும்...

அபர்ணாவுக்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது.

மறுகணம்... மூவரும் சொல்லி வைத்தாற்போல் கலகலவென்று சிரிக்க... அந்த வீட்டில் மகிழ்ச்சி வெள்ளம் அலை அலையாகப் பொங்கியது.

## 10

சுபயோக சுப தினத்தில் திருமணம் இனிதே நடந்தேறியது. பாசிப் பச்சை வண்ணப்பட்டுப் புடவையில் சொற்ப நகைகளை அணிந்து கொண்டு... எளிய அலங்காரத்திலும் தேவதையாய் ஜொலித்த அபர்ணா.. கைகளில் பால் சொம்பை ஏந்தி மெல்ல நடந்து வந்து கதவை மெல்லத் தாழிட்டாள்.

தயக்கத்திலும் வெட்கத்திலும் கால்கள் பின்ன... மெதுவாக நடந்து பால் சொம்பை சிறு மேஜையின் மீது வைத்தாள்.

இதழ்களில் குறுநகை சிந்த... அரவிந்தை நெருங்கியவள் சட்டென அவன் பாதங்களில் பணிந்தாள்.

"இ... இதெல்லாம் வேண்டாமே அபர்ணா" என்றபடி பதற்றமாய்

அவளது தோள்களைப் பற்றித் தூக்கினான்.

"நீயும் நானும் கணவன் மனைவி... லைஃப் பார்ட்னர்ஸ்! என்னைப் பொறுத்தவரை ஈக்வல் பார்ட்னர்ஸ்... பெண்களைக் கொத்தடிமைகளா நடத்தற ஆணாதிக்கத்தை வெறுக்கறவன் நான்...

மனைவிக்கு மதிப்பளிச்சு, அவளோட உணர்வுகளைப் புரிஞ்சு நடந்துக்கறவன்தான் உண்மையான மனுஷன். என் சுக, துக்கங்களைப் பங்குபோட்டுக்க வந்திருக்கே... நீ என் மனைவி மட்டும் இல்ல... நல்ல ஃபிரண்ட்! அதனால இனிமே கால்லே விழுந்து பணியறதை விட்டுடு... சரியா? என்னை நீ பேர் சொல்லிதான் கூப்பிடணும்"

"மனைவியோட உணர்வுகளுக்கு மதிப்பளிச்சு நடந்துக்கிற கணவன் கிடைக்க நான் கொடுத்து வச்சிருக்கேன். கால்லே விழுந்தா என்னைத் தாழ்த்திக்கிறேன்னு அர்த்தம் எடுத்துக்க வேணாம்... வயசுல சின்னவங்க பெரியவங்க கால்லே விழுந்து நமஸ்காரம் பண்ணிக்கிடறது நல்லது இல்லையா? உத்தமமான உன்னதமான மனிதர் நீங்க... உங்க ஆசீர்வாதம் எனக்கு கிடைக்கணும்னு விரும்பறேன்... இந்த விருப்பத்துக்கு இனிமே தடை சொல்ல மாட்டீங்கன்னு நம்பறேன்... என் உணர்வுகளுக்கு மதிப்பு அளிப்பீங்கன்னு... நான் நம்பலாமா?" என்று அவள் கொக்கி போட்டதும் திணறித்தான் போனான் அரவிந்த்.

"மை காட்! என்ன இப்படி கேட்டுட்டே? தா... தாராளமா... உன் விருப்பம் போல் நடந்துக்கலாம். நான் எதுக்கும் தடை சொல்லவே மாட்டேன்... அபர்ணா! மைகாட்... உம்!... உன்னைப் பேசி... உன்கிட்ட பேசி ஜெயிக்க முடியாது போலிருக்கே? குட்! நல்ல சமயோசிதம் தான்!"

உரிமையாய் அவளது கரங்களைப் பற்றியபடி.. அவளை ஊன்றிப் பார்த்தான்.

"நமக்குள்ளே எந்த விதமான ஒளிவு மறைவும் இருக்கக்கூடாது அபர்ணா. இப்படி உட்காரு... நம்ப வாழ்க்கையைத் தொடங்கறதுக்கு முன்ன... என்னைப் பத்தின அத்தனை விவரங்களையும் நீ தெரிஞ்சுக்கணும். இதுநாள் வரைக்கும் என் மனசுக்குள்ளேயே புதைச்சுட்டிருந்த விஷயத்தை உன்கிட்ட தெளிவா சொல்லிடணும்னு பிரியப்படறேன்..."

பீடிகை போட்ட கணவனை விழிகள் விரியப் பார்த்தபடி... மெல்ல பூக்களால் அலங்கரிக்கப்பட்ட கட்டிலில் அமர்ந்தாள்.

அருகில் அமர்ந்து அவளது கைவிரல்களுடன் தன் விரல்களைக் கோர்த்தபடி புருவங்கள் நெரிய அவளை ஏறிட்டான்.

"காலேஜுலே படிக்கும்போது.. செகண்ட் இயர்னு நெனக்கிறேன். நந்தினிங்கிற பொண்ணை நான் லவ் பண்ணினேன். ரெண்டு பேரும் ஒரே

## கவிதைகள்

### நட்சத்திரம்

எந்தத் தாய்
வானமகளுக்கு
வைத்தாள்
இவ்வளவு
திருஷ்டிப் பொட்டுகள்...?

### தேடல்

தன்னிலிருந்து
கடவுளை
விரட்டிவிட்டு
கடவுளைத் தேடும்
மனிதன்!

- செல்வராஜா, சேலம்

ஊரு... ஒரே காலேஜ்! பஸ்ஸுலே ஒண்ணாகப் போகணும்... வரணும். சிநேகிதமா மெல்ல சிரிச்சு ரெண்டோரு வார்த்தை பேசிட்டிருந்தவங்க தான்... திடீர்னு எங்களுக்குள்ளே காதல் மலர்ந்துச்சு...

நந்தினி அபாரமான அழகி. அவளோட கடைக்கண் பார்வைக்காக காலேஜ் வாசல்லே பசங்க பழியாய் தவங்கிடப்பாங்க... அப்பேர்ப்பட்ட அழகி என்னை விரும்பினதும் எனக்கு சந்தோஷம் பிடிபடலை. அப்படியே இறக்கை கட்டிப் பறந்தாப்பல மகிழ்ச்சியில மிதந்தேன்.

அந்த சந்தோஷம் மூணு மாசம் கூட நீடிக்கல... நந்தினி வீட்டுலே திடீர்னு ஒரு முட்டுக் கட்டை போட்டாங்க... படிப்புக்கு முற்றுப்புள்ளி வச்சு வீட்டோட நிறுத்திட்டாங்க... ‘நல்ல வரன் வந்திருக்கு... இதைவிட்டா இப்படியொரு வரனைத் தேடிப் பிடிக்கிறது கஷ்டம்! அதனால படிப்பை நிறுத்திட்டு கழுத்தை நீட்டுன்னு பெரியவங்க சொன்னப்போ... நந்தினியால பயத்துல எதுவும் பேச முடியலை...

காதலைப் பத்தி வெளியில மூச்சு விடக்கூட முடியலை... ஜாதிப் பிரச்சினை வேற... அவளுக்கு ரெண்டு தங்கச்சிங்க வேற...

காதலிக்கும் போது கண்ணுக்கு எதெல்லாம் தெரியலையோ... அதெல்லாமே இப்ப தெளிவா தெரிய ஆரம்பிச்சதும்... எல்லோருடைய நன்மைக்காக காதலை தியாகம் பண்ணிடலாம்னு முடிவு பண்ணி கல்யாணத்துக்கு சம்மதிச்சுட்டா... எனக்கும் என்ன செய்யறதுன்னு தெரியாம பயங்கர குழப்பம்... ஜாதி குறுக்கிட்டதால எங்க வீட்டுலே இதைப்பத்தி நான் வாயே திறக்க முடியலை... என்னை நண்பர்கள் திட்டினாங்க... ‘நந்தினியை இழுத்துக்கிட்டு ஓடிப்போயிடு... தாலியைக் கட்டிட்டா... யாராலேயும் உங்களைப் பிரிக்க முடியாதுன்னு சொன்னாங்க...

எங்க ரெண்டுபேரோட சந்தோஷத்துக்காக... ரெண்டு குடும்பத்தோட நிம்மதியைக் குழி தோண்டிப் புதைக்கணுமா?ன்னு எனக்குள்ளே ஒரு கேள்வி! அத்தோட அப்போ நான் என்ஜினியரே ஆகலை... தேர்ட் இயர் தான் படிச்சுட்டிருந்தேன்.

நம்பி வந்தவளை கல்யாணம் பண்ணிக்கிட்டா... அவளோட ரெண்டு தங்கச்சிங்க வாழ்க்கை கேள்விக்குறியாயிடுமே?

எல்லாத்தையும் யோசிச்சுப் பாத்தேன். மனசுல இருந்த காதலுக்கு சமாதி கட்டிட்டேன்! நந்தினிக்கு கல்யாணமானதும் விரக்தியில மனசு உடைஞ்சு போகலை... பெத்தவங்க கஷ்டப்பட்டு படிக்க வைக்கிறாங்க... இனி அவங்க மனசு குளிரும்படி நடந்துக்க வேண்டியதுதான்னு... சிரத்தையா படிச்சு டிஸ்டிங்ஷனில் தேறினேன். வேலை தேடி வந்தது.

கல்யாணமே வேண்டாம்னு பிடிவாதமா தான் இருந்தேன். என்னை மாலையும் கழுத்துமா பார்க்கணுமேன்னு பெரியவங்களுக்கு ரொம்ப ஏக்கம்... அவங்களுக்கு நிம்மதி தர்றது என் கடமை இல்லையா? கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டேன். ஒப்புக்காக பொண்ணு பார்க்க வந்தேன். உன்னைப் பார்த்ததுமே... உன் முகம் சட்டுன்னு மனசுல ஒட்டிக்கிட்டது. எஸ்... ரொம்பப் பிடிச்சு போச்சு.

இப்போ... என் மனசு கிளீன் ஸ்லேட்டா தான் இருக்கு. அதுல உன் பேர்தான் கல்வெட்டு மாதிரி பதிஞ்சிருக்கு... உன்கிட்டே எதையும் மறைக்காம சொல்லிட்டேன். இனி எப்பவும் இந்த இதயத்துல சிம்மாசனம் போட்டு நீ தான் உட்கார்ந்திருக்கப் போறே... மனசு முழுக்க நீதான் விஸ்வரூபம் எடுத்திருக்கே அபர்ணா! ஐ லவ் யூ ஸோ மச்... என்ன அப்படியே பார்த்துட்டிருக்கே? ஃப்ரீயா பேசு அபர்ணா" அவளது தளிர்க்கரத்தை எடுத்துத் தன் கன்னத்தில் பொருத்திக் கொண்டான் அரவிந்த்.

"மனசுல எதையும் வச்சுக்காம வெளிப்படையாக நீங்க பேசினதைக் கேட்டதும்... சந்தோஷமாத்தான் இருக்கு.. ந.. நந்தினியை அதுக்கு அப்புறமா நீங்க சந்திச்சுப் பேசினீங்களா?"

"ஊகூம்... ஈரோட்டுலே கணவரோட அவ நல்லா வாழ்ந்துட்டிருக்கானு கேள்விப்பட்டேன். ஒரு குழந்தை கூட இருக்குன்னு... பார்த்த நண்பர்கள் சொன்னாங்க... எப்படியோ அவ நல்லாயிருந்தா சரி... எப்போ அவளுக்கு கல்யாணமாச்சோ... அப்பவே அவளை என் மனசிலிருந்து தூக்கி எறிஞ்சுட்டேன்.

அது ஒரு மெச்சூரிட்டி இல்லாத காதல்னு தான் சொல்லணும். ஜஸ்ட் இன்ஃபாச்சுவேஷன்! அடுத்தவனோட மனைவி அவ... அதனால அவளைப் பார்க்கணும், பேசணும்கிற ஆர்வம் எனக்கு துளிகூட வந்ததே இல்லை... அவ வாழ்க்கை நிம்மதியா போயிட்டிருக்குங்கிறதை கேள்விப் படறப்போ... உள்ளூர திருப்தியா தானிருக்கு. அதையும் வெளிப்படையா சொல்லிடறேன். என்னை விரும்பின பெண்... நான் நேசிச்ச பெண்... நிம்மதியா இருக்கிறா"

"காதல் கை கூடாம போயிடுச்சு. சூழ்நிலைக் கைதியாகி நந்தினி

வேறொருத்தருக்கு மனைவியாகிட்டாலும்... அவ வாழ்க்கை நல்லா இருக்கணும்னு ஆதங்கப்படறீங்களே? எவ்ளோ உயர்ந்த எண்ணம்? உங்களைக் கணவரா அடைய நான் ரொம்பவே கொடுத்து வச்சிருக்கேன்"

"படிச்சவ... திறமைசாலி, பொறுமையும் பொறுப்பும் நிறைஞ்சவ நாசுக்கா நாகரீகமா மனசைப் புரிஞ்சுகிட்டு பேசறே பாரு?... நீ கிடைக்க நான் தான் கொடுத்து வச்சிருக்கணும் அபர்ணா" முகம் மலரப் பேசியபடி ஆசையாய் அவளைத் தன் நெஞ்சோடு சாய்த்துக் கொண்டான்.

## 11

**ம**ணவாழ்க்கை என்பது... அபர்ணாவைப் பொறுத்தவரை சொர்க்கமாகத்தான் இருந்தது. பெரியவர்கள் ஒரே வாரத்தில் கிராமத்துக்குக் கிளம்பிப் போனதும்... அரவிந்த் தனது மாமியார் பார்வதியை வற்புறுத்தி அழைத்து வந்துவிட்டான்.

புதிதாகப் பழகுபவர்களுக்கு... அரவிந்தையும் பார்வதியையும் மருமகன்–மாமியார் என்றால் ஆச்சரியத்தில் புருவங்களை மேலேற்றுவார்கள்.

அரவிந்த், பாசமாய் உரிமையாய் நடந்து கொள்வதைப் பார்த்துவிட்டு 'தாய்–மகன்' என்று தான் எண்ணத் தோன்றும்.

திருமணத்துக்குப் பின்பு பார்வதிக்கு கவலை என்ற வார்த்தைக்கு அர்த்தமே தெரியாமல் போய்விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

அம்மாவின் முகத்தில் தாண்டவமாடிய மகிழ்ச்சியைக் கண்டு... உள்ளூர நிம்மதிப் பெருமூச்சு விடுவாள் அபர்ணா.

'கணவன் அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் தான்! திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன' என்று பெரியவர்கள் சும்மாவா சொல்லி வைத்தார்கள்.

உள்ளங்கையில் வைத்து அவளைத் தாங்கியவன்... அவளது விருப்பத்திற்கு ஏற்ப வேலைக்குச் செல்லவும் அனுமதித்தான்.

நாட்கள் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தன.

கணவன் மனைவியுமாய் லோன் போட்டு... வண்டலூரில் பச்சைப் பசேலென்ற சூழ்நிலையில் ஏகாந்தமாய் குட்டி பங்களா கட்டிக் கொண்டு சமீபத்தில் குடி வந்தனர்.

கடந்த பத்து தினங்களுக்கு முன்பு தான்... அபர்ணாவுக்கு முதல் முறையாக மனதில் நெருடல் தோன்றியது!

அரவிந்திடம் சில மாற்றங்கள் தோன்ற ஆரம்பித்தன. தினமும்

ஆபீசுக்கு அவனுடன் காரில் கிளம்பிச் சென்று விடுவாள். அவளை டிராப் பண்ணிவிட்டு அவனது அலுவலகத்திற்குச் செல்லுவான்.

சாயந்தரம் அவள் வேலையை முடித்துவிட்டு அலுவலக வாயிலை விட்டு வெளியேறினால்... புன்னகை மாறாமல் காரில் அவளது வருகைக்காகக் காத்திருப்பான் அரவிந்த்.

காரில் வீட்டிற்கு வந்து சேரும் வரை... அலுவலகத்தில் அன்று நடந்த சமாச்சாரங்களைப் பற்றி பேசிக் கொண்டே வருவான்.

அவனது பேச்சைக் கேட்கும் போதே... அவளுக்கும் சுவாரசியம் தொற்றிக் கொள்ளும். தனது அலுவலகத்தில் நடந்தவிஷயங்களை அவள் கூட ஆரம்பிப்பாள்.

வீட்டிற்கு வந்து சுடச்சுட காபியைப் பருகி முடித்துவிட்டு... முன்னறை சோபாவில் அமர்ந்தபடி டி.வி.யைப் பார்த்த படி உள்ளூர் செய்திகள் முதல்... உலகச் செய்திகள் வரை... எதைப் பற்றியாவது வளவளவென்று பேசிக் கொண்டிருப்பான்.

பார்வதியும் டி.வி.யில் ஒரு கண்ணும், மருமகன் பேசுவதில் ஒரு கண்ணுமாய் பெருமிதமாய் அமர்ந்திருப்பாள்.

அவன் வீட்டிலிருந்தால் பொழுதுபோவதே தெரியாது. அப்படி வாய் சளைக்காமல் பேசுபவன்.. சில தினங்களாக மவுனம் காத்தவிதம்... அபர்ணாவுக்கு கண்ணில் பட்ட மணலாய் உறுத்தியது.

இரவில் தனியறையில்... தினமும் மனதிற்குப் பிடித்த



**ஆ**ப்கானிஸ்தானத்தில் காபூல் தேசிய அருங்காட்சியகத்தில் அரிய கலைப் பொருட்கள் உள்ளன. இவைகள் அண்மையில் நியூயார்க் மெட்ரோபாலிட்டன் கலை அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டன. அவற்றில் ஒன்றான இந்த டிராகன் பதக்கம் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தது.

– க.ரவீந்திரன்

இசையைப் போட்டுக் கேட்பான். கவிதைப் புத்தகத்தை வாசித்துவிட்டு பிடித்த வரிகளை அவளுடன் சிலாகித்து அலசுபவன்தான்!

திடீரென்று இறுகின முகத்துடன் "டயர்டா இருக்கு அபர்ணா நான் படுத்துக்கப் போறேன். புத்தகம் வாசிக்கிற மூடு இல்ல. விளக்கை அணைச்சுடேன் ப்ளீஸ்" என்றுவிட்டு முதுகு காட்டிப் படுத்துக் கொண்டான்.



முகம் கொடுத்துப் பேசுவதைத் தவிர்த்தான். அபர்ணா "என்னங்க? உடம்புக்கு என்ன பண்ணுது? உங்க முகத்துல கலகலப்பையே காணோமே? ஆபீசுலே ஒர்க்லோடு ஜாஸ்தியாயிடுச்சா?" என்று அக்கறையாய் அவள் விசாரித்தபோது அவளை ஏறிட்டுப் பார்க்கத் தெம்பின்றி பார்வையைத் தழைத்துக் கொண்டான்.

"லேசா தலை வலிக்குது அபர்ணா... ஆபீஸ்லே நார்மல் ஒர்க் தான் மெல்ல முணு முணுத்தான்.

"தைலம் தேய்ச்சு விடட்டுமா? தலைவலிக்கு அம்மாகிட்ட சொல்லி கை மருந்து ஏதாச்சும் செஞ்சு தரச் சொல்லவா?" பதறிப்போய் பேசியவளை இடைமறித்தான் அரவிந்த்.

"ஏன் பதட்டப் படறே அபர்ணா? எனக்கு ஒண்ணுமே இல்ல... சின்ன விஷயத்தை ஏன் பெரிசு படுத்தறே? எனக்கு ஒண்ணும் வேணாம்... மனசைப் போட்டு அலட்டிக்காம நிம்மதியா இரு... சரி.. உண்மையைச் சொல்லிடறேன்... எனக்கு தலை வலி இல்ல... ஆபீஸ்லே இருந்து புறப்பட்டேன் பாரு... வழியிலே ஒரு ஆக்ஸிடெண்ட்டை பாத்துட்டேன். அதான்... மனசுக்கு ஒரு மாதிரியா இருக்கு... வேற ஒண்ணுமில்ல பயப்படாதே"

ஆதுரமாய் அவளது தோளில் தட்டிக் கொடுத்தான்.

ஆனாலும் அபர்ணாவின் மனம் சமாதானம் அடையவில்லை. "இன்னிக்குத் தானே ஆக்ஸிடெண்ட் நடந்துச்சு? ஆனா... ரெண்டு மூணு நாளா உங்க முகம் ஏன் வாட்டமா இருக்கு... குரல்லே சுரத்தே இல்ல... நேருக்கு நேரா என் கண்ணையே குறுகுறுன்னு ஊன்றிப் பார்த்துக்கிட்டுப் பேசுவீங்களே?

சதா சிரிச்ச முகமா ஜோக்கடிச்சுட்டு வளைய வர்ற நீங்க... எதையோ பறிகொடுத்த மாதிரி மவுனமாயிட்டீங்களே? என்ன காரணம்? என்கிட்ட



பாடகி பிரிட்டனி ஸ்பியர்ஸின் ஆல்பம்–3, பில் போர்டு ஹாட் டாப் 100 சிறந்த ஆல்பங்களில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. இது வெளியான முதல் வாரத்திலேயே 2.5 லட்சம் ரசிகர்கள், இணைய தளத்திலிருந்து டவுன்லோடு செய்துள்ளனர். இதைத் தவிர பாடகி அமெரிக்காவிலேயே சிறந்த தாயாராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- க.ரவீந்திரன்

மனசு விட்டுப் பேசினா, உங்க பாரம் கொஞ்சம் இறங்குமே? எதுவா இருந்தாலும் ஓபனா பேசுங்க அரவிந்த்... ப்ளீஸ்!" என்று கேட்டுவிட அவளது நாக்கு துடித்தது.

போட்டா போட்டி போட்டுக் கொண்டு ஓடி வந்த வார்த்தைகள்... தொண்டையைத் தாண்டாமல் மவுனம் காத்தன.

அபர்ணா எப்போதும் நாசூக்காக நடந்து பழக்கப்பட்டவள். 'என்னிடம் மனம்விட்டுப் பேச முடியாமல்... ஏதோ ஒன்று அவரைத் தடுக்கிறது. என்னிடம் சொல்வதற்கு அவருக்கு விருப்பமில்லை. விருப்பமில்லாதவரை வற்புறுத்துவது அநாகரீகம்' தனக்குள் பேசிக் கொண்டவள்... அதற்கு மேல் அவனிடம் இது விஷயமாகப் பேசிக் கிளறாமல்... விலகியே இருந்தாள்.

'இது காலம் வரை நகமும் சதையுமாய் ஒற்றுமையாய் வாழ்ந்து வந்த எங்களுக்குள் ஏதோ விரிசல் விழுந்து விட்டதே' என்று உள்ளுக்குள் மனம் கசிந்தாள்.

இந்த முறை புராஜெக்ட் விஷயமாய் அவன் வெளியூருக்குக் கிளம்பிச் சென்றதும்... தங்களது அறையை துப்புரவாக்கும் பணியில் ஈடுபட்டாள்.

அவனது துணிமணிகளை அடுக்கி வைத்துவிட்டு மேஜை டிராயரைத் திறந்து பழைய பில் ரசீதுகளை அகற்றி விட்டு நிமிர்ந்தபோது... அந்த டைரி பளிச்சென்று கண்களில் பட்டது.

"அட... டைரியை வச்சுட்டுப் போயிட்டாரே?" தனக்குள்

பேசியபடி டைரியை எடுத்து மெல்லப் புரட்டினாள்.

கணவன் மனைவி இருவருக்குமே தினமும் டைரி எழுதும் பழக்கம் உண்டு. அரவிந்த் புராஜெக்ட் விஷயமாக வெளியில் கிளம்பும்போது மறக்காமல் டைரியை எடுத்துச் சென்று விடுவான்.

'டைரியை மறந்துவிட்டு ஒருநாளும் வெளியூர் சென்றதில்லையே? அப்படியென்ன அவருக்கு மனக்குழப்பம்? என்னிடம் கூட மனம்விட்டு எதையும் சொல்லாமல் புழுங்கித் தவிக்கிறாரே?

விஷயம் என்னவாக இருக்கும்? ஆபீஸில் ஏதாவது பிரச்சினையோ? கணவன் மனைவியாக இருந்தாலும்... இதுவரை அவரது டைரியைப் புரட்டி எதையும் வாசித்ததில்லை.

அவரது புதுக் கவலைக்கு என்ன காரணம் என்று தெரியாமல் தவிக்கிறேன். தலையே வெடித்துவிடும் போலிருக்கிறது. ஆபத்துக்கு பாவம் இல்லை. விஷயம் என்னவென்று தெரிந்து கொண்டால்... என்னால் முடிந்தவரை அவரது கவலையைப் போக்க முயற்சி செய்ய முடியுமே?

அவரது நலனுக்காக... அவரது அந்தரங்க டைரியை வாசித்துத் தெரிந்து கொள்வதில் தவறொன்றும் இல்லையே?'

தன்னைத்தானே சமாதானம் செய்தபடி... மூன்று நாட்களுக்கு முந்தைய பக்கத்தைத் திறந்து பார்வையை ஓட்டினாள்.

'நந்தினி! நந்தினியே தான்... என் மனதில் ஒரு காலத்தில் சிம்மாசனம் இட்டு அமர்ந்திருந்த காதல் தேவதையே தான்...!

அவளா இவள்? அவளேதான்! என் மனம் அறுதியிட்டுக் கூறியது. என் கண்களைத்தான் என்னால் நம்ப முடியவில்லையோ?

இத்தனை வருடங்களுக்குப் பிறகு... அவளை சந்திப்பேன் என்று நான் கனவிலும் கருதவில்லையே?

என்னைக் கிட்டத்தில் பார்த்ததும் அடையாளம் தெரிந்துகொண்டு அதிர்ந்து, அவளது விழிகளிலிருந்து கண்ணீர் உடைப்பெடுத்து வழிந்ததே,

அதைக் கண்டதும் என் உச்சி முதல் பாதம் வரை... ஏனிந்த அதிர்வு? அவள் நிர்க்கதியாய் நிற்கிறாள் என்று தெரிந்ததும் என் மனம் பதறுகின்றதே? நிம்மதி முற்றிலும் தொலைந்து போய் விட்டதே?

நானொருவன் உயிரோடு இருக்கும் வரை... நந்தினி நட்டாற்றில் நிற்கக் கூடாது.

உறவுக்காரர்கள் கூட உதவாமல் உதறிவிட்டார்களாமே?

'நந்தினி... உனக்கு நானிருக்கிறேன். இனி நீ கண்ணீர் சிந்தக்கூடாது. உனக்கு நல்ல வாழ்க்கையை ஏற்படுத்தித் தரும்வரை எனக்கு நிம்மதியில்லை.

என்று உள்ளூர மனம் புலம்பிக் கொண்டே இருக்கிறது.

வீட்டில் இதைப் பற்றி நான் மூச்சு விடவில்லை. சொன்னால் கண்டிப்பாக பிரச்சினை வரும்'

அபர்ணாவுக்கு திக்கென்றிருந்தது. குபுக் என்று விழிகளில் நீர்த்திரையிட்டது. காலடியில் தரை நகர்ந்து செல்வது போலிருந்தது.

## 12

'ஓ... முன்னாள் காதலி நந்தினியை சந்தித்துவிட்டாரா? அவள் நிர்க்கதியாய் நிற்கிறாள் என்றதும் பதறிப் போனாரா? அவளுக்கு நல்ல வாழ்க்கையைத் தரும் வரை... அவருக்கு நிம்மதியில்லையா?

அதனால் தான் முகத்தில் மலர்ச்சியைத் தொலைத்துவிட்டாரா? நந்தினியின் நினைவை தூக்கியெறிந்துவிட்டேன்' என்று முதலிரவில் கூறினாரே? அது பொய்யா?

ஊகூம்... அது பொய்யாக இருக்க முடியாது. அவளை மறந்து என்னுடன் ஆத்மார்த்தமாக அன்னியோன்யமாகத்தானே... இதுவரை இருந்தார்?

திடீரென்று நந்தினியை சந்தித்ததும்... அவரது மனம் தடம் புரண்டு விட்டது போலும்.

நந்தினியின் நினைவு அவரது மனதில் நீறு பூத்த நெருப்பாய் இதுவரை இருந்திருக்க வேண்டும்...

அவள் ஏதோ கஷ்டத்தில் இருக்கிறாள் என்றதும் எப்படித் துடித்துப்போய் புலம்பியிருக்கிறார். எப்படி பதறுகின்றார்?

'அவளுக்கு நல்ல வாழ்க்கையை ஏற்படுத்தித் தரும் வரை' என்று எழுதியிருக்கிறாரே? அதற்கு என்ன அர்த்தம்?

ஆயிரம் தான் இருந்தாலும் அவள் இவருடைய காதலி...! ஆத்மார்த்தமாக இருவரும் விரும்பியவர்கள்... நான் நேற்று வந்தவள் தானே?

நந்தினிக்கு வாழ்க்கை தர வேண்டும் என்றே முடிவெடுத்துவிட்டாரே? அப்படியென்றால்... என் கதி?

நேருக்குநேர் பார்ப்பதைத் தவிர்க்கிறாரே? ஏதோ குற்ற உணர்வு அவரைக் குடைகின்றது என்றுதானே அர்த்தம்?

நந்தினி வந்ததும் என்னைத் தூக்கியெறிந்து விடத் துணிந்து விட்டாரோ? ஆம்... அப்படித்தான் இருக்கவேண்டும்.

வீட்டில் இதைப் பற்றி மூச்சுவிடவில்லை. சொன்னால் கண்டிப்பாக பிரச்சினையாகிவிடும்' என்று எழுதியிருக்கிறாரே,

பிரிந்தவர்கள் கூடிவிட்டார்கள். நந்தினிக்கு மறுவாழ்வு தரவே தயாராகிவிட்டார். அவர்கள் இருவரும் இணைவதற்கு நான்தான் இடைஞ்லாக இருக்கிறேன் போலும்!

அதனால்தான் என்னைக் கண்டாலே பிடிக்கவில்லை. விலக ஆரம்பித்துவிட்டார். சரி! அடுத்த பக்கத்தில் என்ன எழுதியிருக்கிறார் என்று பார்ப்போம்...'

மனதில் முணுமுணுத்தபடி அடுத்த பக்கத்தைப் புரட்டினாள் அபர்ணா.

'நானும் நந்தினியும் வக்கீல் தாமோதரனை சந்தித்தோம். அவரது அலுவலகத்தை விட்டு வெளியில் வந்ததும்... நந்தினையை ஏறிட்டுப் பார்த்தேன். மாலை நேரத்துப் பொன் மஞ்சள் வெயில் பட்டு... தனி சோபையுடன் அவள் மிளிர்ந்தாற் போலிருந்தாள்.

'சிக்கல் சுலபத்தில் தீர்ந்துவிடும்' என்ற நம்பிக்கை வந்ததும் அவளது முகத்தில் ஒரு அலாதி பொலிவும் நிம்மதியும் குடி வந்து விட்டன. இது நிரந்தரமாக நீடிக்கவேண்டும் என்பதுதானே என் விருப்பம்'

விழிகளில் நீர்த்திரையிட்டு அவனது எழுத்துக்கள் மங்கலாகத் தெரியவே... கண்களைத் துடைத்துக் கொண்டு மீண்டும் மீண்டும் வாசித்தாள்.

அதற்கு மேல் அரவிந்த் டைரியில் ஒன்றும் எழுதவில்லை.

'அரவிந்த் நந்தினியுடன் வக்கீலைப் பார்த்து இருக்கிறார். என்னை விவாகரத்து செய்வதில் ஏதேனும் சட்டச் சிக்கல் இருக்கின்றதா? என்று கன்சல்ட் செய்வதற்காகப் போயிருப்பார்கள்... அப்படித்தான் இருக்க வேண்டும் .

வக்கீலும், 'சுலபமாய் டைவர்ஸ் வாங்கித் தந்து விடுகிறேன்' என்று நம்பிக்கை அளித்திருப்பார். அதனால்தான் நந்தினியின் முகத்தில் நிம்மதியும் பொலிவும் ஏற்பட்டது போலும்.

தனி சோபையுடன் அவள் மிளிர்ந்ததை... அரவிந்த் ரசித்துப் பார்த்திருக்கிறாரே? அவள் மேல் இவருக்கு எவ்வளவு ஆசை?

'நிரந்தரமாக இது நீடிக்க வேண்டும்' என்கிறாரே? என்ன அர்த்தம்? என்னைக் கழற்றிவிட்டு அவளுடன் வாழ்வாங்கு வாழ ஆசைப்படுகின்றார் என்று தானே அர்த்தம்?

அவரது ஆசைக்கு குறுக்கே நந்தி போல் நான் ஏன் நிற்க வேண்டும்?

அரவிந்த் எப்படியோ?... ஆனால் நான் அவரை என் உயிரினும் மேலாக நேசித்து வருகிறேன்.

அவரது ஆசைக்கு குறுக்கே நான் நிற்கமாட்டேன். அப்படியே குறுக்கே நின்று நியாயம் கேட்டுப் போராடி... என்ன சாதித்துவிடப் போகின்றேன்...

என்மேல் அவருக்கு வெறுப்புதான் அதிகமாகும். பிடிவாதம் பிடித்து உரிமைகளை நிலைநாட்டினால்... யாருக்கு என்ன லாபம்?

அவரது வெறுப்பையும் விரோதத்தையும் வளர்த்துக் கொண்டு ஒரே வீட்டில் எதிரிகள் போல் வாழத்தான் முடியுமா?

இது காலம் வரை... அவரது அன்பு மழையில் நனைந்து திளைத்து விட்டேன்... அவர் முகம் சுளித்து வெறுப்பாய் ஒரு பார்வை பார்த்தாலும் என்னால் தாங்க முடியாதே?

வேண்டாம்... அவராவது நிம்மதியாக இருக்கட்டும். பிரச்சினை செய்து இருவருக்குமே நிம்மதியில்லாமல் வாழ்வதைவிட... விட்டுக் கொடுத்து விலகி... அவர் தனது காதலியுடன் இணைந்து சந்தோஷமாய் வாழ்வதை எட்ட நின்று பார்த்து திருப்திப் பட்டுக் கொள்ள வேண்டியதுதான்.

இந்த விஷயத்தை அம்மாவுடன் எப்படி சொல்லப் போறேன்? அரவிந்த்... புராஜெக்ட் விஷயமாய் வெளியூர் சென்றிருக்கிறாரே? போன காரியத்தை முடித்துவிட்டு வரட்டும்.

எப்படியும் அவராக விஷயத்தைப் போட்டு உடைக்கத்தானே போகின்றார். அப்போது பார்த்துக் கொள்ளலாம்...

நான் அவரது டைரியைப் படித்துவிட்டு ஊகித்த விஷயங்கள் சரியாக இருக்குமா?

அல்லது அரைகுறையாக அவர் எழுதியிருப்பதைப் படித்துவிட்டு தவறாக முடிவெடுத்து விட்டேனா? அரவிந்த் எவ்வளவு நல்லவர்! உத்தமர்! உன்னதமான மனிதர்! மனிதநேயம் மிக்கவராயிற்றே?

தன் சுயநலத்திற்காக... அதாவது நந்தினியோடு சேர்ந்து வாழும் சந்தோஷத்திற்காக... என்னை நிராகரிப்பாரா?

எனக்கு துரோகம் செய்யத் துணிவாரா?

'உன் கண்களில் ஒரு சொட்டுக் கண்ணீர்கூட வரக்கூடாது' என்று அடிக்கடி அன்பாய்க் கூறியவர்... என்னைக் கண்ணீர் கடலில் தள்ளிவிடத் துணிவாரா?

ஊகூம்... அப்படியெல்லாம் செய்யமாட்டாரே?

காலம் முழுக்க கஷ்டப்பட்டவள் அம்மா. சமீபகாலமாகத்தான் நிம்மதியாய் இருக்கிறாள். மருமகனின் வரவுக்குப் பின்னர்தான் அவளுக்கு

நிம்மதி கிட்டியது.

இனி... அவரும் நானும் பிரியப் போவது தெரிந்தால்...? அதிர்ச்சியிலேயே உயிரை விட்டாலும் விட்டு விடுவாளே?

ஐயோ... அம்மாவை எப்படி சமாளிக்கப்போகிறேன்? அம்மாவின் மேல் அரவிந்துக்கு மிகுந்த மரியாதையும் அன்பும் உண்டு அல்லவா? பெற்ற தாய்க்கு நிகராகப் பாசம் காட்டியவர் அல்லவா?

அந்தத் தாயின் மனம் நோகும்படி ஒரு காரியத்தைச் செய்து விடுவாரா? ஊகூம்... நிச்சயம் செய்ய மாட்டார்...'

அந்த டைரியை வாசித்ததிலிருந்து... தூக்கம் அபர்ணாவிடமிருந்து விடை பெற்றுச் சென்றுவிட்டது.

குழப்பத்திலும் திகிலிலும் எப்படியோ நாட்களைக் கடத்தி வந்தாள். அம்மாவின் உடல் நலனை உத்தேசித்தாவது... அரவிந்த் அவளைக் கைவிடமாட்டான்' என்ற நம்பிக்கை நூலில் அவள் தொங்கிக் கொண்டிருந்தாள்.

ஆனால்... இன்று கணேஷ்ராம் வீட்டிற்கு வந்து 'அரவிந்த் ஒரு பெண்ணுடன் ஜோடியாய் ஹோட்டலுக்கு வந்தான்' என்று சொன்னது... ஆயிரம் பூகம்பங்கள் தோன்றி இதயமே நொறுங்கிப் பொடியாகிவிட்டது போன்றதொரு துயரத்தில் அமிழ்ந்து போனாள் அபர்ணா.

மௌனமாய் அழுதழுது மூக்கில் நீர் கோர்த்து மூச்சு விட முடியாமல் திணறினாள்.

சின்ன விசும்பல் சத்தம் வந்தால்கூட... அம்மா பதறிப் போவாளே? திகிலுடன் பக்கவாட்டில் பார்த்தாள்.

அம்மா பார்வதி நிம்மதியாய் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

'இது ஊர்ஜிதம் தான்! தெள்ளத் தெளிவாகப் புரிகின்றதே? அரவிந்த் பொய் சொல்ல ஆரம்பித்துவிட்டார். ஒரு தப்பை மறைக்கப் பிரயத்தனப்பட்டு பொய் பேசத் தொடங்கிவிட்டார்.

புராஜெக்ட் விஷயமாய் வெளிநாட்டுக்குச் சென்றால்கூட... இரண்டு முறையாவது ஃபோனில் பேசாமல் இருக்கமாட்டாரே?

ஊருக்குச் சென்று ஒரே ஒருமுறை ஒப்புக்கு ஃபோன், செய்ததோடு சரி... அதற்குப் பின் அவரும் பேசவில்லை... நான் செல்லுக்கு முயற்சித்தால் ஸ்விட்ஸ் ஆப் என்ற அறிவிப்பு தானே வருகிறது.

எப்படியும் சில தினங்களில் அரவிந்த் வந்துவிடப் போகிறார். இந்த பந்தத்தை முறித்துவிடப் போகிறார்.

அதன் பின்... என்ன செய்யப் போகிறேன் நான்?'

வாழ்க்கை... அந்தகார இருட்டாய் விரிந்து அவளை மிரட்டியதில்... அன்றும் தூங்கவில்லை.

சோர்வு, தூக்கமின்மை, கவலை, திகில், பயம்... இவற்றின் காரணமாக அவளது விழிகள் இரண்டும் திகுதிகுவென்று எரிந்தன.

காலையில் எழுந்து கொள்ள முடியாமல்... உடம்பு அடித்துப் போட்டாற்போல் வலித்தது. காய்ச்சல் அனலாய் கொதித்ததில் அவள் சுருண்டு படுத்துவிட்டாள்.

"அம்மாடி! என்ன இன்னும் எழுந்துக்காம படுத்திருக்கே? நான் காபி போட்டுக் கொண்டாந்திருக்கேன் அபர்ணா..." என்றபடி குனிந்து மகளின் நெற்றியைத் தடவிய பார்வதிக்கு தூக்கி வாரிப் போட்டது.

"ஐயோ! காய்ச்சல் கொதிக்குதே? மாப்பிள்ளை வேற ஊருல இல்லையே? கொஞ்சநாளாவே நீ எதையோ பறிகொடுத்தாப்பலயே இருந்தியே? என்னன்னு கேட்டாலும் சொல்ல மாட்டேங்கிறே?

ஏதோ ஒரு கவலை உன் மனசைப் போட்டு அரிச்சுட்டிருக்கு. அதான் இப்படி சுணங்கி சுருண்டு படுத்துட்டே..." பார்வதி புலம்ப ஆரம்பித்தாள்.

அபர்ணா தன் உலர்ந்த உதட்டை நாவால் ஈரப்படுத்திக் கொண்டாள். அவளால் பதில் சொல்வதற்குக் கூட முடியவில்லை.

வாசலில் கேட் திறக்கும் சப்தம் கேட்டதும்... எழுந்து சென்று எட்டிப் பார்த்த பார்வதி, "அட... அபர்ணா! மாப்பிள்ளை வந்துட்டாரும்மா... அப்பாடா...! என் கவலைவிட்டது. தக்க சமயத்துல வந்து கவலையைத் தீர்க்கிறதிலே... மாப்பிள்ளை ஒரு ஆபத்பாந்தவர்தான்" என்று இரைந்து குரல் கொடுத்தாள்.

அபர்ணாவுக்கு பயத்தில் கை கால்கள் உதறலெடுத்தன.

'அவர் விஷயத்தைப் போட்டு உடைக்கப் போகிறார். அம்மா அதை எப்படி தாங்கிக் கொள்ளப் போகிறாள்?' மெல்ல எழ முயச்சித்தவளுக்கு கண்களை இருட்டிக் கொண்டு வர... மீண்டும் படுக்கையில் சரிந்துவிட்டாள்.

## 13

அபர்ணா மீண்டும் விழிகளை மலர்த்திய போது... எதிரே கவலை முலாம் பூசிய முகங்களோடு பார்வதியும் அரவிந்தும் இருப்பது தெரிய... பக்கவாட்டில் இருந்த லேடி டாக்டர் வசுமதியைக் கண்டதும் மெல்ல புன்னகைக்க முயன்றாள்.

"படுத்துக்கோ அபர்ணா! பயப்படும்படியா ஒண்ணுமில்ல... எல்லாம்

நல்ல விஷயம்தான்... நீ கன்சீவ் ஆயிருக்கே... இனிமே உடம்பை அதிகமா அலட்டிக்காதே... நல்லா சாப்பிடணும், நல்லா தூங்கி ரெஸ்ட் எடுக்கணும். டயட் விஷயத்துல கவனமா இருக்கணும். எழுதித் தர்ற மாத்திரைகளை தவறாம சாப்பிடணும்... ஆரோக்கியமான குழந்தை பிறக்கிறது உன் கையில தாம்மா இருக்கு... சரியா?"

இயந்திரத்தனமாய் தலையை ஆட்டினாள் அபர்ணா.

'இத்தனை காலமாய் கிடைக்காத குழந்தைச் செல்வம்... இப்போது தானா ஜனிக்க வேண்டும்? அவளது மணவாழ்க்கையே ஊசலாடிக் கொண்டிருக்கையில்... புது உயிர் உருவாகியிருக்கிறதே?

மணவாழ்க்கை பறிபோனாலும்... கடவுள் இப்படியொரு பிடிப்பையாவது ஏற்படுத்திக் கொடுத்தாரே? 'தற்கொலை செய்து கொள்ளத் தேவையில்லை. குழந்தை முகத்தைப் பார்த்தே... வாழ்க்கையை ஓட்டிவிடு' என்று பகவான் கூறாமல் கூறுகிறாரோ?'

விழிகளிலிருந்து கண்ணீர் பொங்கிப் பொங்கி வழிந்தது.

டாக்டர் வசுமதியைப் பின்தொடர்ந்து பார்வதியும் நாசூக்காக வெளியேறினாள்.

அரவிந்த் அவளது விழிகளை ஊன்றிப் பார்த்தபடி தலைமாட்டில் வந்து அமர்ந்து அவளது கரத்தை மிருதுவாகப் பற்றினான்.

"அபர்ணா! இது உனக்கே நியாயமா? என்னை இவ்ளோ கீழ்த்தரமா எடைபோட்டுட்டியேடா? என்ன அப்படி முழிக்கறே? கொஞ்சநாளா உன் முகம் எதையோ பறிகொடுத்தாப்பல இருந்துச்சுன்னு... நான் வந்ததுமே அத்தை சொன்னாங்க... நான் வந்ததும் வராததுமா நீ வேற மயக்கம் போட்டுட்டே...

டாக்டருக்கு ஃபோன் பண்ணி வரவழைச்சேன். ஊசி போட்டாங்க... உனக்கு மயக்கம் தெளியறவரைக்கும்... எனக்கு பொறுமை இல்ல... நம்ம ரூமுக்குள்ளே போயி உன் டைரியை எடுத்துப் பிரிச்சு பாத்துட்டேன்.

நான் டைரியில எழுதியிருந்ததை அரைகுறையா வாசிச்சுட்டு... சந்தேகப்பட்டு உணர்வுப் பூர்வமா எவ்ளோ சித்திரவதை அனுபவிச்சுட்டே?என்ன முழிக்கிறே? எங்க அண்ணன் வேற வீட்டுக்கு வந்து ஒரு விஷயத்தை சொன்னாரு' அப்படின்னு தான் சொல்ல வர்றே?... இரு... நானே விரிவா சொல்லிடறேன்.

நந்தினியை ஒரு ஹாஸ்பிடல்லே சந்திச்சதும் ஷாக் ஆயிட்டேன். என் நண்பரைப் பார்க்கப் போன இடத்துல... எதிர்பாராம அவளைப் பார்த்தேன். அவளோட கணவருக்கு குடல்வால் அறுவை சிகிச்சையாம்... அதற்காக அங்க அனுமதிக்கப்பட்டிருந்தாரு... அவங்க பிஸினஸ் ரொம்ப நொடிஞ்சு போச்சாம்... நொடிஞ்சு போனதும் உறவுக்காரங்க யாரும்

மதிக்கலையாம்...

ஈரோட்டுலே அவங்க பரம்பரை சொத்து ஒண்ணு இருந்தது. அந்த நிலத்தை குத்தகைக்கு எடுத்தவங்க ரொம்ப வில்லங்கம் பண்றாங்க. அந்த நிலத்தை வித்துட்டு இருக்கிற கடனை அடைச்சுட்டா கொஞ்சம் நிம்மதியா இருக்கும்னு நந்தினி ஃபீல் பண்ணி பேசினா...

கணவர் பிழைச்சு வருவாரோ மாட்டாரோங்கிற பயம் வேற... அப்படியே வந்தாலும் எப்படி எதிர்நீச்சல் போட்டு சம்பாதிச்சு வாழ்க்கையை ஓட்டப் போறோம்கிற பயம் வேற... ஆயிரம்தான் இருந்தாலும் என்னால நந்தினியை வறுமைக் கோலத்துல பார்க்க சகிக்கலை... அவ கஷ்டப்பட்டாம நிம்மதியா வாழணும். வாழ வைக்கணும்னு எனக்குள்ளே ஒரு எண்ணம்! வக்கீலைப் பார்த்துப் பேசினேன்.

அவர் சொன்ன ஐடியா பிரகாரம்... ஈரோட்லே இருக்கிற முக்கியமான வி.ஐ.பி. மூலமா அந்த குத்தகைதாரர்கிட்டே டீல் பண்ணினேன். அவனும் பிரச்சினை பண்ணாம ஒதுங்க ஒத்துக்கிட்டான். நிலத்தை விற்கத் தரகர் மூலமா ஏற்பாடு பண்ணினேன். இங்க ஹாஸ்பிடல் செலவையும் நானே ஏத்துக்கிட்டேன். இங்க ஹாஸ்பிடல்லே இருக்கிற கணவரை என் நண்பர் மூலமா கவனிக்க ஏற்பாடு பண்ணிட்டு... நந்தினியும் நானும் தான் ஈரோட்டுக்குப் போனோம். கவலையில பயத்துல நந்தினிக்கு கிட்டினஸ் வந்துடுச்சு. அவளைக் கைத்தாங்கலா ஹோட்டலுக்கு கூட்டிட்டுப் போனேன். அன்னிக்குத் தான் சார்பதிவாளர் அலுவலகத்துல பத்திரப் பதிவு முடிஞ்சு பணம் வந்தது.

இந்த வாட்டி புராஜெக்ட் விஷயமா நான் வெளியூர் போகலை. நந்தினிக்கு உதவுவதற்காகத்தான் லீவை எடுத்தேன். இந்த உண்மையை சொன்னா... நீ எப்படி எடுத்துப்பேன்னு எனக்கு குழப்பம்! நீயும் ஒரு


அடுத்த சிமிழ்
வரலொட்டி ரெங்கசாமி
எழுதிய
வாழ நினைத்தால் வாழலாம்
ஒரு வித்தியாசமான
தன்னம்பிக்கை நவீனம்

பெண்தான்னு நிரூபிச்சுட்டியே? சந்தேக புத்தி எட்டிப் பார்த்துடுச்சே, இதுக்குத்தான் நானும் விஷயத்தை மறைச்சேன். நந்தினியோட கணவர் அபாய கட்டத்தைத் தாண்டிட்டாரு...

நந்தினி நல்லா சமைப்பாளாம்... அவ கணவருக்கும் நளபாகம் அத்துபடியாம். அவர் சரியாகி வந்ததும் கேண்டீன் நடத்திப் பிழைச்சுக்கலாம்னு முடிவு பண்ணிட்டாங்க... நானும் நல்ல இடத்துல அவங்களுக்கு கேண்டீன் வச்சுத்தர்ற ஏற்பாடு செய்யறதா சொல்லியிருக்கேன். பணமுதலீடு செய்து உதவலாம்னு இருக்கேன்.

கஷ்ட ஜீவனம் பண்றவங்களை நாம்ப கை தூக்கிவிட்டா... நமக்கு எவ்வளவோ புண்ணியம் கிடைக்கும்னு சொல்வியே? நிலத்தை வித்து வந்த பணத்துல கடனை அடைச்சுட்டாங்க. நந்தினிக்கு திரும்பவும் ஈரோட்டுக்குப் போகப்பிடிக்கலை... வந்தாரை வாழ வைக்கும் சென்னையிலேயே தங்கிடலாம்னு முடிவு பண்ணிட்டா... அவளுக்கு ஒரு குழந்தை இருக்கு. அவ கணவருக்கு நாளைக்கு டிஸ்சார்ஜ்! டிஸ்சார்ஜ் ஆனதும் அவங்களை இங்க கூட்டிட்டு வரலாம்னு எனக்கு ஆசை... என்னோட உன்னதமான மனைவியையும் அவளோட தயாள குணத்தையும் அவங்க பார்க்கணும்னு நான் பிரியப்பட்டேன்... நீ என்னடான்னா... என்னை சந்தேகப்பட்டுட்டு ஏதேதோ கற்பனை பண்ணித் தற்கொலை செய்துக்கலாம்கிற எல்லை வரை போயிட்டியே?

மக்கு! என் முழுப் பெயர் உனக்குத் தெரியுமில்லையா? அரவிந்த்ராம்! ராம்னு பேர் வச்சுட்டா போதுமா? நான் உண்மையிலேயே ஏகபத்தினி விரதன்தான்... ஒரு காலத்துல என்னை விரும்பின பெண்... நட்டாத்துல நின்னதும் பதறினேன்... அவ நல்லாயிருக்கணும்னு நான் பிரியப்பட்டது தப்பா அபர்ணா!

என் மனசுல நீ மட்டும்தான் இருக்கே... உனக்காகத்தான் நான் வாழ்ந்துட்டு இருக்கேன். மனிதாபிமானத்துல செய்த உதவியை... தப்பா நெனச்சுட்டியே? வாராது வந்த மாமணியா... உன் வயித்துல நம்ம குழந்தை ஜனிச்ச சமயத்துல... இப்படி உடம்புக்கு முடியாம படுத்துட்டியே அபர்ணா?”

“சா... சாரிங்க... அரைகுறையா எழுதப்பட்ட விஷயத்தைப் படிச்சுட்டு ஏதேதோ ஊகிச்சுட்டேன். சாரி... உங்க டைரியைப் படிச்சது தவறுதான்! உங்க நல்ல மனசை எப்படிப் பாராட்டறதுன்னு தெரியலை...

நந்தினியை நாளைக்கு இங்க வரவழைங்க... அவ கணவர் சரியாகி நடமாடி கேண்டீன் தொடங்கற வரைக்கும் அவங்க இங்கேயே இருக்கட்டும். பக்கத்துலேயே வீடு பார்த்துக் குடுத்துடலாம். சாரிங்க... அன்பு அதிகமா இருக்கிற இடத்துலதான் சந்தேகம் இருக்கும்னு சொல்வாங்க...

எவ்ளோ உன்னதமான மனசு உங்களுக்கு? இப்படிப்பட்ட உத்தமரை

சந்தேகிச்சேனே? என்ன பாவத்துக்கு ஆளாவேனோ?"

"ப்ச்! எமோஷனலாகாதே அபர்ணா! ரொம்ப காலத்துக்கு அப்புறம் நமக்கு இந்த வரம் கிடைச்சிருக்கு"

"கொஞ்சம் என்னைப் பேச விடுங்க அரவிந்த்! உண்மை தெரிஞ்சதும் முன்னை விடப் பன்மடங்கா உங்க மேல எனக்கு அன்பும் மரியாதையும் ஏற்பட்டிருச்சு... எனக்கு கூடப் பிறந்தவங்க யாரும் கிடையாது. நந்தினியும் சொந்த பந்தங்கள் நம்மை உதறிட்டாங்களே'ன்னு கவலைப்படறாங்க...

நந்தினியை என் சகோதரியா மதிக்கிறேங்க... நந்தினிக்கும் கிட்டேயே வீடு பாருங்க.. அடுத்தவங்களுக்கு உதவி பண்ணினாத்தான்... நாம்ப மனுஷனாப் பிறந்ததுக்கு ஒரு அர்த்தம் இருக்கும். நாளைக்கு நமக்கும் குழந்தை பிறக்கும்.

ஒருத்தருக்கொருத்தர் உதவிக்கிட்டு நேசமா உறவாடணும்னு எனக்கு ஆசைங்க... என்னை மன்னிச்சுட்டேன்'னு ஒரு வார்த்தை சொல்லுங்களேன். ப்ளீஸ்"

"நமக்குள்ளே மன்னிப்புங்கிற வார்த்தைக்கே இடமில்லை. மன்னிக்கிற அளவு பெரிய தப்பை நீ ஒண்ணும் செய்துடலை. என் மேல தான் உனக்கு எவ்ளோ அன்பு? உன்னோட உரிமைக்காக என்கிட்ட போராடணும்னு நெனக்காம... என் சந்தோஷத்துக்காக விட்டுக் கொடுத்து விலகிப் போகணும்னு முடிவெடுத்தியே? உனக்கு இவ்ளோ தியாக மனப்பான்மையா? உன்னை நெனச்சா ரொம்பவே பெருமையா இருக்கு. ஆனா உனக்கு தற்கொலை எண்ணம் தலைதூக்கினதைத் தான் என்னால சகிக்க முடியலை"

"அப்படியொரு எண்ணம் உதிச்சது உண்மை. ஆனா இன்னிக்கு நான் உண்டாகியிருக்கேன்னு தெரிஞ்சதும்... அந்த எண்ணம் காணாம போயிடுச்சு. நம்ம குழந்தையோட முகத்தைப் பார்த்துக்கிட்டு... உங்க நெனப்போடவே வாழ்ந்துடலாம்னு இருந்தேன். நீங்க இப்படியொரு சர்ப்ரைஸ் குடுப்பீங்கன்னு எதிர்பார்க்கலை..."

"இதுநாள் வரை சின்ன மனக்கசப்பு கூட இல்லாம... உனக்காக நானும் எனக்காக நீயும் வாழ்ந்தோம்... இனிமே நம்ம குழந்தைக்காக வாழப் போறோம்... சரி... இப்போ ஏதோ கேட்டியே? உன் ஆசைக்கு எப்போ நான் மறுப்பு தெரிவிச்சிருக்கேன்? நந்தினி குடும்பத்தோட கடைசி வரை நேசமா உறவாடலாம்."

"ஐ லவ் யூ ஸோ மச் அரவிந்த்" மெல்ல முணுமுணுத்தபடி அவனது பரந்த மார்பில் சாய்ந்து கொண்டாள் அபர்ணா.

**முற்றும்**